பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 29 புதன்கிழமை (12-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:199



நாடு திரும்பும் வழியில் நேற்றிரவு சென்னையில் தங்கிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை சந்தித்தார். இரு தலைவர்களுக்குமிடையே நேற்றிரவு சுமார் அரை மணி நேரம் பேச்சுக்கள் இடம்பெற்றன. இலங்கைப் பிரதமருக்கு முதல்வர் ஜெயலலிதா இராப் போசன விருந்தளித்தார். முதல்வர் ஜெயலலிதா பிரதமர் ரணிலுக்கு மலர் கொத்துக் கொடுத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# இன்று பூரண ஹர்த்தால்!

யாழ்ப்பாணம்,ஜூன்12

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதில் அரசுத் தரப்புக் காட்டி வருகின்ற அசமந்தப் போக்கைக் கண்டித்தும் -

உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியும் இன்று குடாநாடு முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

குடாநாட்டு மக்கள் அனைவரும் இன்று தத்தமது வீடுகளில் தங்கியிருந்து தமது ஒன்றுதிரண்ட எதிர்ப்பையும் ஆட்சேபத்தையும் அமைதியான முறையில் வெளிப்படுத்துமாறு யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

இயல்பு நிலையை முற்றாக ஸ்தம்பிக்கச் செய்வதற்காக பொது மக்களை வீடுகளில் தங்கியிருக்குமாறும் -

சமாதானத்துக்கான பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறும் -

யாழ்மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர்களை அப்புறப்படுத்தி விட்டு செயலக வாயிலை திறந்தது பொலீஸ்!

## ஊழியர்கள் பணிக்குவரப் பின்னடிப்பு மறியல் போராட்டம் தொடர்கின்றது

யாழ்ப்பாணம்,ஜூன்12

**யாழ்.செயலகப் பகுதிக்கு நேற்றுக்காலை திடீரென வந்திறங்கிய பெருமளவு பொலீஸார் அங்கு மறியற்போரில் ஈடுபட்டிருந்த பல நூற்றுக்கணக்கான மீனவர்களை செயலகத்தின் பிரதான வாயில் பகுதியில் இருந்து அப்புறப்படுத்தினர். பின்னர் செயலகத்தின் வாயில்களைத் திறந்து விட்டு அங்கு காவல் கடமையில் ஈடுபட்டனர்.**

பொலீஸாரின் இந்த நடவடிக்கையால் அங்கு சிறிது நேரம் பதற்றமான சூழ்நிலை உருவாகியது. எனினும் மீனவர்கள் பிரதான வாயில் பகுதியை விட்டு விலகி சற்றுத் தள்ளி அமர்ந்து இருந்தவாறு தங்கள் போராட்டத்தை அமைதியான முறையில் தொடர்ந்தனர்.

யாழ்அரச செயலகம், பிரதேச செயலகம் என்பனவற்றுக்கு முன்பாக நடத்தப்பட்டுவரும் மீனவர் போராட்டம் காரணமாகக் கடந்த சில தினங்களாக இந்த இரு அலுவலகங்களும் மூடப்

(14 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.செயலகம் முன்பாக பொலீஸார்

### முகமாலை ஊடான போக்குவரத்து நடைபெறாது

யாழ்ப்பாணம்,ஜூன்12

குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதால் முகமாலை ஊடான போக்குவரத்துக்கள் இன்று ஸ்தம்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து சேவைகள் அனைத்தும் நிறுத்தப்படுவதால் முகமாலைக்கான பயணிகள் பஸ் சேவை எதுவும் இன்று நடைபெறமாட்டாது என்று போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று ஓமந்தை ஊடாக வன்னிக்கான போக்குவரத்துகள் மட்டுமே இடம்பெறும் என்று வவுனியா செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-12-6)

### ரணில் - வாஜ்பாய் பேச்சைத் தொடர்ந்து கூட்டறிக்கை தரும் தகவல்

## திருகோணமலை எண்ணெய்க் குத நிர்வாகம், சில்லறை விற்பனை இனி இந்தியாவிடம்!

புதுடில்லி,ஜூன்12

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துப் பேசியதை அடுத்து இரு நாடுகளும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. அந்த அறிக்கைப்படி திருமலை எண்ணெய்க் குதத்தை இனி இந்திய அரசாங்கத்தின் இந்திய எண்ணெய்க் கம்பனி நிர்வகிக்கும். இந்திய எண்ணெய்க் கம்பனி இலங்கையில் எண்ணெய் சில்லறை விற்பனையையும் மேற்கொள்ளும்.

கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 8ஆம் திகதிமுதல் இன்று 12ஆம் திகதிவரையிலான இந்திய விஜயம் ஒன்றை இந்திய அரசின் அழைப்பின் பேரில் மேற்கொண்டார். அமைச்சர் மிலிந்த மொறகொட அவரோடு உடன்வந்திருந்தார்.

இந்தியாவின் அரசியல் தலைவர்கள் பலரையும் அமைச்சர்களையும் எதிர்க்கட்சித் தலைவர் சோனியா காந்தியையும் ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசினார்.

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான பேச்சு முயற்சிகள் என்ன நிலையில் இருக்கின்றன என்பதை பிரதமர் விளக்கிக் கூறினார். இந்திய அரசு தனது நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தியது.

இலங்கை மக்கள் சமுதாயங்கள் அனைத்தினதும் நீதியான அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் சமாதானப் பேச்சுக்கள் மூலம் இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு பங்கம் ஏற்படாதவிடத்து நிலையான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தியது.

இலங்கை அரசின் சமாதான முயற்சியை முன்னெடுத்து செல்வதற்கு இந்திய அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்தது.

இரண்டு பிரதமர்களும் இரண்டு நாடுகளுக்கிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை அமுலாக்கத்தில காணப்படும் முன்னேற்றம் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்திய வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் முரசொலிமாறனும் இலங்கை வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் சந்தித்து பேசியதையடுத்து அடுத்த மாதம் முதல்வாரத்தில் இந்திய தூதுக்குழு கொழும்பு சென்று முக்கிய நடைமுறை விடயங்களைக் கவனிக்கும்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### எண்ணெய்க் குதம் உடன்படிக்கை கைச்சாத்து

**திருகோணமலை எண்ணெய்க் குதம் சம்பந்தமான உடன்படிக்கை நேற்று புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டது. இந்திய எண்ணெய்க் கம்பனித் தலைவர் எம்.எஸ்.இராமச்சந்திரனும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தஹம் விமலசேனாவும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.**

### படையினரை வெளியேறக் கோரி

## ஹாட்லி, மெதடிஸ் மாணவர்கள் நேற்றும் வகுப்புப் பகிஷ்கரிப்பு!

வடமராட்சி,ஜூன்12

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள நேற்று இரண்டாவது நாளாகவும் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலுள்ள இராணுவத்தினரை வெளியேறக் கோரியும், இரு பாடசாலை வாயில்களிலும் உள்ள இராணுவக் காவலரண்களை அகற்றக் கோரியுமே

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சட்டம், ஒழுங்கை ஸ்திரப்படுத்த இலங்கைக்கு இந்தியா உதவி!

## ரணில் - அத்வானி சந்திப்பில் இணக்கம்

புதுடில்லி,ஜூன்12

**இலங்கையில் சட்டம், ஒழுங்கு நிலைமையை சீராக்கிப் பலப்படுத்தவும் இலங்கைப் பொலீஸாருக்கு வேண்டிய பயிற்சிகளை அளிக்கவும் இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி இணக்கம் தெரிவித்திருக்கிறார்.**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அத்வானியுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இந்த உதவியை வழங்க இந்தியா முன்வந்துள்ளது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக்காலை அமைச்சர் எல்.கே. அத்வானியை புதுடில்லியில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

புதுடில்லி தாஜ்பெலஸ் ஹோட்டலில் சுமார் ஒன்றரை மணி நேரம் இச்சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையில் சட்டத்தையும் ஒழுங்கையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கு புதிய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கிக் கூறினார்.

பொலீஸ் சேவையில் பாரிய மறுசீரமைப்புக்களை ஏற்படுத்தவும் அரசியல் தலையீடுகளைத் தவிர்க்கவும் சுதந்திர பொலீஸ் ஆணைக்குழு ஒன்றை உருவாக்கும் பிரதமரின் திட்டங்களை இந்திய உள்துறை அமைச்சர் எல்கே.அத்வானி பெரிதும் வரவேற்றார்.

பொலீஸ் சேவையில் ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை என்பன அதி முகியம். ஆனால், இலங்கையில் இவை பெரிதும் சீர்குலைந்துள்ளன. எனவே இலங்கையில் பொலீஸாருக்கு இத்துறையில் விசேட பயிற்சிகளை வழங்க இந்தியா தயாராக இருக்கின்றது என இந்திய அமைச்சர் அத்வானி பிரதமரிடம் உறுதியளித்தர். (ஐ)

## இலங்கை - இந்திய செயற்றிட்டங்கள் இரு நாடுகளுக்குமிடையே இணக்கம்

புதுடில்லி,ஜூன்12

பல்வேறு செயற்றிட்டங்கள் பற்றி இலங்கையும் இந்தியாவும் இணக்கம் கண்டுள்ளன.

இலங்கை-இந்திய வர்த்தக உடன படிக்கை மீளாய்வு செய்யப்பட்டு சேவைகளையும் உள்ளடக்கிய புதிய ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்படும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பயணிகள் விமான சேவை விஸ்தரிக்கப்படும்.

இரு நாடுகளுக்குமிடையிலான கப்பல் சேவையும் அதிகரிக்கப்படும்.

இந்திய கொள்கைத் திட்டமிடல் ஆணைக்குழுவும் இலங்கைக் கொள்கைத் திட்டமிடல் அமைச்சும் இணைந்து பொதுவான கொள்கைத் திட்டம் ஒன்றை வகுக்கும்.

நேற்று புதுடில்லியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கும் சந்தித்துப் பேசினர்.

தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் பெருமளவு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்ப பயிற்சி மையம் ஒன்றை அமைக்கவும் இந்தியா இணக்கம் தெரிவித்தது.

அதேவேளை - இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும் இந்தியா அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சகலவிதமான ஆதரவுகளையும் வழங்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் உறுதியளித்துள்ளார்.

புதுடில்லி தாஜ்பெலஸ் ஹோட்டலில் நடைபெற்ற இப்பேச்சுக்களில் பிரதமருடன் அமைச்சர் மிலிந்த மொறகொட, இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க ஆகியோரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்குடன் அமைச்சின் செயலாளரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பேச்சுக்களின் பின் இந்தியப் பிரதமர் வாஜ்பாயை அவரது இல்லத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தம்பதியர் சந்தித்தனர். அவர்களுக்குப் பிரதமர் வாஜ்பாய் பகல் போசன விருந்தளித்து அவர்களைக் கௌரவித்தார். (ஐ-12)

## ஆயுத முனையில் வங்கிக் கொள்ளை

கொழும்பு,ஜூன்12

அப்புத்தளை பிளக்வூட் கூட்டுறவு கிராமிய வங்கியில் ஆயுத முனையில் நேற்று முற்பகல் கொள்ளை இடம்பெற்றுள்ளது. இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவப் படைவீரர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இராணுவ வீரர் தியத்தலாவை இராணுவ முகாமில் நேற்று பகல் இரண்டு மணிக்கு கடமையில் இருக்க வேண்டியவர் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

அப்புத்தளை கூட்டுறவுச் சங்கத்தின் பிளக்வூட் கிராமிய வங்கியிலேயே கொள்ளை இடம்பெற்றுள்ளது. வங்கிக்குள் புகுந்த கொள்ளையர் மூவர் அங்கிருந்த பெண் ஊழியரை ஆயுதமுனையில் பணயம் வைத்து ஒரு லட்சத்துக்கும் அதிகமான பணத்தையும், தங்க ஆபரணங்களையும் கொள்ளையிட்டுள்ளனர். (ஐ)

## ஆஜராகத் தவறிய ஈ.பி.டி.பி. உறுப்பினர் சீ.ஐ.டியினரால் கைது!

யாழ்ப்பாணம்,ஜூன்12

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்குத் தொடர்பான விசாரணைகளுக்கென நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜராகாததை அடுத்து மன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தவரான கந்தசாமி ஜெகதீஸ்வரன் (ஜெகன்) என்பவரைத் தாம் கைது செய்ததாகத் தெரிவித்துக் குற்றப்புலனாய்வுப் பொலீஸார் அவரை நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இதனை அடுத்துக் குறிப்பிட்ட நபரை எதிர்வரும் 25ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்கினராஜா உத்தரவிட்டார்.

மேலும் சில சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான முயற்சியில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் -

விசாரணைகளுக்கென நேற்றுப் பொலீஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட 19 ஈ.பி.டி.பி. உறுப்பினர்களில் 6பேர் மட்டுமே பொலீஸ் நிலையத்துக்கு வருகைதந்து வாக்கு மூலம் வழங்கியதாகவும் -

பொலீஸார் மன்றில் தெரிவித்தனர். எஞ்சிய 13பேரும் மன்றின் கட்டளையை மீறியதால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும எனவும் -

ஈ.பி.டி.பி. கட்சியின் வசம் உள்ள ஆயுதங்களின் முழு விவரங்களையும் கையளிக்க வேண்டும் என்று மன்று கட்டளை இடவேண்டும் எனவும் -

பொலீஸார் கேட்டுக்கொண்டதை அடுத்து எதிர்வரும் 24ஆம் திகதி குறிப்பிட்ட 13பேரையும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டத் துணைப்பொறுப்பாளர் க.மணிபல்லவராஜன் குற்றப்புலனாய்வுப் பொலீஸார் முன்னிலையில் ஆஜர் செய்வதுடன் ஆயுதங்களின் முழு விவரங்களையும் ஒப்படைக்க வேண்டும் எனவும் நீதிவான் இ.த.விக்னராஜா உத்திரவிட்டார். (ஐ-10-8)

## சிறுவர் பாடல் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்12

தனியார் மினிபஸ் சங்க அங்கத்தவர்களுடன் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐக்கிய இராச்சியம்) கலந்துரையாடல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கோயில் வீதியில் இயங்கும் மேற்படி நிறுவனத்தின் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அங்கவீனமடைந்த பாடசாலைச் சிறார்களின் போக்குவரத்துத் தொடர்பாகவும் 'சிறுவர் பாடல்கள்' என்ற ஒளிப்பதிவு நாடா வெளியீடு தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகவும் இதில் தனியார் மினிபஸ் சங்கத்தின் சார்பில் தலைவர், செயலாளர் உட்பட மூன்று பிரதிநிதிகளை கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-6)

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

### சண்டிலிப்பாய் பகுதியில்

யாழ்ப்பாணம்,ஜூன்12

சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கயிற்றில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த சுப்பிரமணியம் மோகனசுந்தரம் (வயது-52) என்ற குடும்பஸ்தரின் சடலமே மீட்கப்பட்டது.

இவரது மனைவியும், பிள்ளைகளும் நயினாதீவு கோயிலுக்குச் சென்றுவிட்டு நேற்றுமுன்தினம் வீடு திரும்பிய போது இவர் கயிற்றில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார் என்று கூறப்படுகிறது.

மானிப்பாய் பொலீஸார் இவரது சடலத்தை பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று மாலை 6 மணிக்கு ஒப்படைத்தனர்.

இவரது சடலத்தில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் பிரஸ்தாப நபர் உயிரிழந்து சுமார் மூன்று தினங்களுக்கு மேல் இருக்கலாம் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-6)

## கோஷ்டி மோதலில் மூவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஜூன்12

சித்தன்கேணிச் சந்தியில் நேற்று இளைஞர் கோஷ்டிகளுக்கு இடையே இடம்பெற்ற மோதல்களில் மூன்று இளைஞர்கள் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சிவன்கோயிலடி, சித்தன்கேணியைச் சேர்ந்த வி.கே.செல்வன (வயது - 30), சுழிபுரத்தைச் சேர்ந்த பரமானந்தன் சூரியகுமார் (வயது - 24) மற்றும் வட்டு.வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த சிதம்பரநாதன் குகாநந்தன் (வயது - 20) ஆகிய மூவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் - இரு குழுக்களையும் சேர்ந்த 6 இளைஞர்களைப் பொலீஸார் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளதாகவும் ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-6)

## ஜப்பான் தென்கொரியா உலகக் கிண்ண கால்பந்து

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.2002 - 30.06.2002





பிரான்ஸின் நட்சத்திர ஆட்டக்காரர் ஸிடான் கட்டுப்பாடற்ற உதை (Free Kick) அடிப்பதைக் காணலாம்.

## உலகக் கிண்ணப் போட்டியிலிருந்து வெளியேறுகின்றது பிரான்ஸ் அணி!

சியோல்,ஜூன்12

பிரான்ஸ் அணிக்கு அதிர்ச்சித் தோல்வியுடன் ஆரம்பமான 17ஆவது உலகக் கிண்ணப் போட்டி முடிவுகள் தொடர்ந்தும் அதிர்ச்சியை ஏற்படுத்துவனவாகவே உள்ளன. கடந்த உலகச் சம்பியனான பிரான்ஸ் அணி நேற்று டென்மார்க் அணியுடனான ஆட்டத்தில் மீண்டும் தோல்வியடைந்து இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் இருந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

நேற்று நான்கு ஆட்டங்கள் இடம்பெற்றன. இவற்றில் அயர்லண்ட், ஜேர்மனி, டென்மார்க் ஆகிய அணிகள் வெற்றிபெற்றன. செனகல் மற்றும் உருகுவே அணிகளிடையேயான ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிந்தது.

பிரான்ஸுக்கும் டென்மார்க்குக்கும் இடையில் நடந்த முதலாவது ஆட்டத்தில் 2-0 என்ற கோல் அடிப்படையில் பிரான்ஸ் படுதோல்வி அடைந்தது. 1966இல் பிரேஸிலில் இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளின் ஆரம்பச்சுற்றிலேயே தோற்று வெளியேறியதற்குப் பின்னர், பிரான்ஸ் ஆரம்பச் சுற்றுடன் வெளியேறுவது இதுவே முதற்றடவையாகும்.

ஆட்டத்தின் முன்பாதியில் 22



சோகக்கடலில் பிரான்ஸ் நாட்டு உதைபந்தாட்ட ரசிகர்கள்.

ஆவது நிமிடத்தில் டென்மார்க் அணியின் டெனிஸ் டொமிடாலும் பின் பாதியில் 67ஆவது நிமிடத்தில் அந்த அணியின் ஜோன் டால் தொம்ஸனும் தமது அணிக்காக கோல்களை அடித்து வெற்றியைத் தேடித்தந்தனர். உலகக் கிண்ணத்தை இம்முறையும் வெல்லக் கூடிய அணிகளுள் ஒன்று என்று எதிர்பார்க்கப்பட்ட பிரான்ஸின் இந்தபடுதோல்வியால் பிரான்ஸ் ரசிகர்கள் சொல்லிமாளா சோகத்துள் ஆழ்ந்து போயினர்.

இரண்டாவது ஆட்டம் செனகல் மற்றும் உருகுவே அணிகளுக்கு இடையில் இடம்பெற்றது. இரு அணிகளும் தலா மூன்று கோல்களை அடிததன. ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிந்தது. ஆட்டத்தின் முன்பாதியில் செனகல் அணிவீரர்கள் மூன்று கோல்களையும் பின்பாதியில் உருகுவே அணி வீரர்கள் மூன்று கோல்களையும் அடித்தனர். ஆட்டத்தின் 19, 26, 38ஆவது நிமிடங்களில் செனகல் அணிவீரர்கள் கோல்களை அடித்தனர். பதிலுக்கு பின்பாதி ஆட்டத்தில் 46, 69, 88ஆவது நிமிடங்களில் உருகுவே வீரர்கள் கோல்களை அடித்து ஆட்டத்தைச் சமநிலைப்படுத்தினர். ஆட்டத்தின் ஆரம்பத்தில் 18ஆவது நிமிடத்தில் உருகுவே வீரர் ஹுரானி முறைகேடாக விளையாடியமைக்காக வழங்கப்பட்ட பெனால்டி உதை மூலமே செனகல் அணி முதலாவது கோலைப பெற்றது.

மூன்றாவது ஆட்டம் ஜேர்மனி - கெமரூன் அணிகளிடையே இடம்பெற்றது. 2-0 என்ற கோல் அடிப்படையில் ஜேர்மனி வெற்றிபெற்றது. ஆட்டத்தின் 40ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் ஹுார்ஸ்ரன் ரமிலோ முறைகேடாக விளையாடியதற்காக நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால் பின்பாதி ஆட்டத்தில் 10 வீரர்களுடன் விளையாடும் நிலைக்கு ஜேர்மனி தள்ளப்பட்டது. ஆனாலும் ஜேர்மனிய வீரர்கள் சிறப்பாக ஆடி ஆட்டத்தின் 50ஆவது நிமிடத்திலும் 79ஆவது நிமிடத்திலும் கோல்கள் அடித்தனர். மார்க்கோ போட் மற்றும் கோல்ஸ் ஆகியோர் ஜேர்மனி சார்பில் கோல் அடித்தனர். இறுதியில் 2-0 என்ற கோல் அடிப்படையில் ஜேர்மனி வெற்றிபெற்றது.

நான்காவது ஆட்டம் அயர்லண்ட மற்றும் சவூதி அரேபியா அணிகளிடையே இடம்பெற்றது. இந்த ஆட்டத்திலும் தோல்வியடைந்ததன் மூலம் தான் விளையாடிய அனைத்து ஆட்டங்களிலும் தோல்வியடைந்த நாடாகியது சவூதி அரேபியா.

ஆட்டம் ஆரம்பமான 7ஆவது நிமிடத்திலேயே அயர்லண்ட் அணி வீரர் ரொப்பி கீன் முதலாவது கோலை அடித்தார். 61ஆவது நிமிடத்தில் கிரே பிறீன் மீண்டும் ஒரு கோலை அடித்தார். இறுதியில் ஆட்டத்தின் 86 ஆவது நிமிடத்தில் டாமின் டவ்ஸீல் மூன்றாவது கோலை அடித்து தனது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

### இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜூன்1

உலகக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம் (உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-

- சுவீடன் எதிர் ஆர்ஜென்ரீனா (கொரியா - பகல் 12.30)
- நைஜீரியா எதிர் இங்கிலாந்து (கொரியா - பகல் 12.30)
- தென் ஆபிரிக்கா எதிர் ஸ்பெயின் (ஜப்பான் - பகல் 5.30)
- ஸ்லோவேனியா எதிர் பரகுவே (ஜப்பான் - மாலை 5.30) (ம)

### அமெ. கப்பல்களைத் தாக்கத் திட்டமிட்ட

# 'அல்கெய்டா' தீவிரவாதிகள் மொரோக்கோவில் கைது!

லண்டன்,ஜுன்12

மத்திய தரைக் கடற்பகுதியில் நிலைகொண்டுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் போர்க் கப்பல்களின் மீது தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படும் மூன்று சவூதி அரேபியர்கள் மெரோக்கோ அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அல்கெய்டா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று மொரோக்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர்கள் மூவரும் வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட படகுகளை அமெரிக்க, பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள் மீது மோதித் தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தாகக் கூறப்பட்டது.

ஆயினும் அதற்கான ஆதாரங்களையோ அரபுக்கள் அல்கெய்டாவுடன் தொடர்புடையவர்கள் என்பதை நிரூபிக்கும் சான்றுகளையோ மொரோக்கோ அதிகாரிகள் வெளியிடவில்ல. (ஒ-9)

# சிம்பாப்வே வீதி விபத்தில் 37 மாணவர் கருகிப்பலி!

## தேசிய அழிவாகப் பிரகடனம்

ஹராரே,ஜுன்12

சிம்பாப்வேயில் இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் 37பேர் கருகி உயிரிழந்த சம்பவத்தை தேசிய அழிவாக அறிவித்துள்ளது சிம்பாப்வே அரசு. விபத்தில் உயிரிழந்தவர்களின்



நைஜீரியாவில் விபத்துக்குள்ளான பஸ்ஸும் லொறியும் தீப்பற்றி எரிந்து, உருக்குலைந்து கிடக்கும் காட்சி.

குடும்பங்களுக்கு அரசின் நிதி உதவிகள் கிடைப்பதற்கு ஏதுவாகவே இந்த அறிவிப்பை அரசு வெளியிட்டதாகக் கூறப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் பயணித்த பஸ்ஸும், சோளம் ஏற்றி வந்த லொறியும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இருவாகனங்களும் கவிழ்ந்து தீப்பிடித்துக் கொண்டன.

மாஸ்வின்கோ நகரின மத்திய பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது இதில் 10 முதல் 35பேர்வரை காயங்களுடன் காப்பாற்றப்பட்டனர்.

தலைநகர் ஹராரேயில் நடந்த விளையாட்டுப் போட்டியொன்றில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிய மாணவர்கள் பயணித்த பஸ் உள்ளூர் நேரப்படி இரவு 10 மணிக்கு விபத்தில் சிக்கியது.

சிம்பாப்வே அதிக எண்ணிக்கையிலான வீதி விபத்துக்கள் இடம்பெறும் நாடுகளில் ஒன்று என்பதும்-

அவற்றில் பெரும்பாலான விபத்துக்களுக்கு மது போதையில் வாகனங்களை செலுத்துவதே காரணம் என்பதும் - குறிப்பிடத்தக்கவை. (ஒ)

# லண்டன் வீடுகளுக்குள் நுழைந்து கொள்ளையடிக்கும் மனிதக் குரங்கு

லண்டன்,ஜுன்12

பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து மனிதக் குரங்கு கொள்ளையடிக்க ஆரம்பித்துள்ளது.

கிழக்கு லண்டனில் ஹாக்னி என்ற இடத்தில் வசிக்கும் முஸ்தபா ரியாத் என்பவரின் வீட்டுக்குள் கடந்த மாதம் ஜன்னல் வழியாக நுழைந்த மனிதக் குரங்கு ஒன்று 'செலூலர்' தொலைபேசியை திருடிச்சென்றது.

இது குறித்து ரியாட் பொலீஸில் முறையிட்ட போதும் ரியாட்டின் வீடு புறநகர்ப்பகுதியில் இருந்ததால் தற்செயலாக எங்கிருந்தோ வந்த மனிதக் குரங்கின் சேஷ்டை இது என்று நம்பிய பொலீஸார் ரியாட்டின் முறைப்பாடு குறித்து அக்கறை காட்டவில்லை.

ஆனால், சில நாள்களில் மற்றொரு வீட்டுக்குள் வீட்டு உரிமையாளரும் குடும்பத்தினரும் அமர்ந்து இசை கேட்டுக்கொண்டிருந்த சமயம் உள்ளே நுழைந்த மனிதக் குரங்கு அவர்கள் இசை கேட்ட 'ஸ்டீரியோ' சாதனத்தை தூக்கிச் சென்றது. இது போன்றே அப்பகுதியில் வேறு பல வீடுகளிலும் மனிதக் குரங்கு தனது கைவரிசையைக் காட்டியதாக முறைப்பாடுகள் வந்தன.

இதனைத் தொடர்ந்து விசாரணையில் இறங்கிய பொலீஸாருக்கு 'கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட மனிதக் குரங்கை காரில் அப் பகுதியில் கொண்டுவந்து இறக்கிவிட்டு அதுபொருள்களை எடுத்து வந்த பின்னர் காரில் ஏற்றிச் செல்லும் கொள்ளையனைப் பற்றித் தெரிய வந்துள்ளது.

அந்தக் கொள்ளையனை லண்டன் பொலீஸார் தேடிவருகின்றனர். (ஒ)

# பிரான்ஸ் பொதுத் தேர்தலில் அதிபர் ஷிராக்கின் கட்சி முன்னணி!

## தஞ்சம் கோருவோர்க்கு நிம்மதி

பாரிஸ்,ஜுன்12

பிரான்ஸின் நாடாளுமன்றத் தேர்தலில் முதல்கட்ட வாக்குப் பதிவில் அதிபர் ஜக் ஷிராக்கின் யு.எம்.பி.கட்சி தலைமையிலான கூட்டணி அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. இந்தக் கூட்டணி 43.52 வீத வாக்குகளைப் பெற்றது.

சோஷலிஸ்ட் கட்சிக் கூட்டணிக்கு 37.24வீத வாக்குகள் கிடைத்தன. குடியேற்றவாசிகள் மற்றும் அரசியல் அகதிகளுக்கு எதிராகக்கடும் போக்கைக் கடைப்பிடிப்பவரும், வலது சாரித்தலைவருமான ஜுன்மாரி லீ பென்னின் கட்சி 11.24 வீத வாக்குகளை மட்டுமே பெற்றது.

கடந்தமாதம் இடம்பெற்ற அதிபர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட்ட போது லீ பென் 18வீத வாக்குகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவரது கட்சி தேர்தலில் பின்தங்கியிருப்பது பிரான்ஸில் அகதி அந்தஸ்து கோருவோருக்கு நிம்மதி அளிப்பதாகக் கூறப்படுகின்றது. (ஒ)

# 'அசுத்தக் குண்டு' குறித்து அதிபர் புஷ் எச்சரிக்கை!

வாஷிங்ரன்,ஜுன்12

அமெரிக்கா மீது தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்படக்கூடிய 'அசுத்தக் குண்டு'(Dirty Bomb) தாக்குதல்கள் குறித்து அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் எச்சரித்துள்ளார்.

அணு மற்றும் உயிரியல் ஆயுதங்களை விட 'அசுத்தக் குண்டு' பெரும்கேடு விளைவிக்கும் என்றும்-

அதனைக் கொண்டே தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொள்வார்கள் என்றும் -

அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா மீது கதிர்த் தொழிற்பாட்டுப் பதார்த்தங்கள் அடங்கிய- பெரு முழக்கத்துடன் வெடிக்கும் 'அசுத்தக் குண்டு'களை வீசுவதற்கு அல்கெய்டா தீவிரவாதிகள் தீட்டியிருந்த சதித் திட்டம் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே இந்த எச்சரிக்கையை அதிபர் புஷ் வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து சிக்காகோ விமான நிலையத்தில் வந்திறங்கிய அப்துல்லா அல் முஜாஹீர் என்ற நபர் கடந்த எட்டாம் திகதி கைது செய்யப்பட்டதை அடுத்தே 'அசுத்தக் குண்டு' குறித்த தகவல்கள் வெளிவந்துள்ளன.

மனிதருக்கு மரணத்தை ஏற்படுத்தும் உயர் நச்சுத்தன்மை வாய்ந்த பதார்த்தங்களை பரப்பவல்ல குண்டுகளை வெடிக்க வைப்பதற்கு இச்சந்தேக நபர் திட்டமிட்டிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட இலக்குகளைத் தெரிவு செய்வதற்கு முன்பாக தீவிரவாதிகளின் திட்டம் முறியடிக்கப்பட்டுவிட்டதாக அமெரிக்காவில் இருந்து வெளியான அதிகாரபூர்வ செய்திகள் தெரிவித்தன.

அல்கெய்டா அமைப்பினர் இன்னமும் முழு செயற்பாட்டுடனும், உத்வேகத்துடனும் விளங்குகிறார்கள் என்பதனையும் -

அவர்கள் மிகப்பெரிய அமைப்புக்களின் ஆதரவை மத்திய கிழக்கில் கொண்டுள்ளார்கள் என்பதையுமே இச்சதித்திட்டங்கள் காட்டுகின்றன. ஏனெனில் அவர்கள் அமைதியாக அமெரிக்காவுக்கு எதிரான மிகப் பெரும் தாக்குதலை மேற்கொள்ள முயற்சிக்கிறார்கள் என்று அமெரிக்க அரசின் பேச்சாளர் தெரிவித்தார். அல்கெய்டா தீவிரவாதிகள் பெருமெடுப்பில் இரண்டாவது தாக்குதலை கதிரியக்கப் பொருள்களுடன் தொடர்புபடுத்தி அமெரிக்கா மீது நடத்தினால் அதன் விளைவுகளை பெரும்பாலும் தடுக்கமுடியாது என்று மேற்குலக புலனாய்வு நிபுணர்கள் நம்புகின்றனர். (ஒ-9)

# இந்திய ஜனாதிபதி பதவிக்கு அப்துல் கலாம் பெயர் சிபார்சு!

## ஆளும் கூட்டணி சார்பாக



அப்துல் கலாம்

புதுடில்லி,ஜுன்12

இந்திய ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் தமது வேட்பாளராக பிரபல அணுசக்தி பாதுகாப்புத்துறை விஞ்ஞானியும் தமிழ் முஸ்லிமுமான அப்துல் கலாமை ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி முன்மொழிந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா நடத்திய அணுகுண்டு பரிசோதனை, ஏவுகணைப் பரிசோதனைகள் உட்பட இந்தியாவின் ஆயுத பலத்தை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளில் முதுகெலும்பாக இருந்தவர் அப்துல் கலாம் ஆவார். இந்தியப் பாதுகாப்புத் துறையின் விஞ்ஞான ஆலோசகர் பதவி வகித்த அவர் தற்போது ஓய்வுபெற்றுவிட்டார்.

அப்துல் கலாமை ஜனாதிபதி வேட்பாளராக ஆளும் கூட்டணி தெரிவு செய்துள்ளதை காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியிடம் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானி அப்துல் கலாம் தமிழகத்தின் இராமேஸ்வரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# தம்மைத் தாமே பாதுகாக்க அமெரிக்க யூதர் படை அமைப்பு!

## நியூயோர்க் பொலீஸ் அதற்கு எதிர்ப்பு!!

நியூயோர்க்,ஜுன்12

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வாழும் யூதர்கள் தமது பாதுகாப்புக்கென தாமே ஆயுதப்படைகளை அமைக்க முயற்சிக்கக்கூடாது என நியூயோர்க் பொலீஸார் எச்சரித்துள்ளனர்.

பலஸ்தீன பிரதேசங்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதை அடுத்து நியூயோர்க் நகரில் வசிக்கும் யூதர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவில் யூதர்கள் அதிகம் வாழும் நியூயோர்க் நகரை தலைமையிடமாக்க கொண்டு இயங்கும் யூத பாதுகாப்புக் குழுவினர் வெளியிட்ட அறிக்கையில், செப்ரெம்பர் 11 தாக்குதலை நடத்திய பின்லேடனின் உண்மையான இலக்கு நியூயோர்க் நகர யூதக் குடியிருப்பே என்றும் -

தீவிரவாத தாக்குதல்களை எதிர்கொள்ள யூதர்கள் தமது குடியிருப்புப் பகுதி வீதிகளில் ஆயுதங்களுடன் பாதுகாப்பு கண்காணிப்பை மேற்கொள்ளவேண்டும் என்றும் -

கோரியிருந்தது.

இதுவரை சுமார் 50 யூதர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட சம்மதம் தெரிவித்து கையெழுத்திட்டுள்ளதாக யூதப் பாதுகாப்புக் குழுவின் தலைவர் ரபி யாக்கோ லொயிட் தெரிவித்திருந்தார்.

ஆனால், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள நியூயோர்க் நகர பொலீஸ் துறைப் பேச்சாளர் மைக் வைசோகோவ்ஸ்கி, 'நியூயோர்க் நகர வீதிகளில் தனிப்பட்ட நபர்கள் ஆயுதங்களுடன் நடமாடினால் கைது செய்யப்படுவார்கள்' என்று எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவில் துப்பாக்கியை தனிப்பட்ட நபர் சுடத் தயாராக பகிரங்கமாக வீதியில் எடுத்துச்செல்வது சட்டவிரோதமானது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேசமயம் பாதுகாப்பில் ஈடுபடும் யூதர்களில் துப்பாக்கி வைத்திருக்க அனுமதி பெற்றவர்கள் தத்தமது துப்பாக்கிகளை அவற்றுக்குரிய உறைகளில் இட்டு எடுத்துச் செல்வார்கள் என்றும் -

மற்றைய யூதர்கள் 'பேஸ்' பந்தாட்டத்தில் பயன்படுத்தப்படும் நீண்ட துடுப்புக்களையே ஆயுதமாக எடுத்துச் செல்வார்கள் எனவும் ரபி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் அமெரிக்காவில் பெரும் சட்டப் போராக உருவெடுக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. (ஒ)



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வசித்துவரும் யூத இனத்தவரில் சிலரைப் படத்தில் காணலாம்.

# இந்திய வான்பரப்பை பயன்படுத்த பாகிஸ்தானுக்கு மீண்டும் அனுமதி

புதுடில்லி,ஜுன்12

இந்திய வான் பரப்பில், பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு விதித்திருந்த தடையை இந்தியா விலக்கிக்கொண்டது.

நேற்றுமுன்தினம் இரவு அறிவிக்கப்பட்ட இந்த முடிவு உடனடியாக நடைமுறைக்கு வந்தது. இந்தியா மேற்கொண்ட இந்த முடிவால் இரு நாடுகளிடையேயும் நிலவி வரும் பதற்றத்தை கணிசமான அளவு தணிக்கும் அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

பாகிஸ்தானிலிருந்து தீவிரவாதிகள் ஊடுருவுவது ஓரளவு குறையத் தொடங்கியுள்ளதற்கான அறிகுறிகளும் இருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறினார்.

ஆனால் இந்திய வான்பரப்பில் பாகிஸ்தானிய விமானங்கள் பறப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை அகற்றப்பட்டதை வைத்து, பயங்கரவாதத்துக்கு எதிரான போரைத் தொடர்வது என்ற இந்தியாவின் உறுதிப்பாட்டில் தொய்வு ஏற்பட்டிருப்பதாக பாகிஸ்தானோ தீவிரவாதிகளோ கருதிவிடக்கூடாது என்றும் அவர் தெளிவுபடுத்தினார். தடையை அகற்றுவது என்ற முடிவு அமைதி காணவேண்டும் என்ற இந்தியாவின் உண்மையான ஆர்வத்தைக் காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய அரசின் இந்த முடிவு அமைதியை நோக்கி சரியான திசையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்று இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோ தெரிவித்துள்ளார்.

அதேசமயம் பயங்கரவாதம் இன்னும் ஓர் அச்சுறுத்தலாகவே உள்ளதாகவும் -

இரு நாடுகளிடையேயான உறவு நிலை இன்னமும் பதற்றமாகவே உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஒ-9)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வகுப்புகள்

தரம் 3இலிருந்து தரம் 12வரையும் க.பொ.த.(உ/த) பரீட்சை எடுத்தவர்களுக்கும் ஆங்கில வகுப்புகள் தகுதிவாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும். கற்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் சனி, ஞாயிறு தினங்களில் தகவலைப் பெற்றுக் கொள்ளவும். "மங்களபவன்" மானிப்பாய் வீதி, உரும்பிராய் (சந்திரோதய வித்தியாசாலை முன் ஒழுங்கை). (4739)

O/L, A/Lஇற்குத் தோற்றிய மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்: 15-06-2002. தொடர்பு: த.நாகேந்திரம், 34/4, செட்டித்தெரு, நல்லூர். (4719)

## கைரேகை பார்த்தல்

கைரேகை, ஜாதகம், எண்சோதிடம், திருமணப் பொருத்தம், தெய்வீக நூல் கட்டவும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சி.சோதி நாகரத்தினம், மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை. (4627)

## விற்பனைக்கு

பூச்சிநீக்கிய பொமனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. (கறுப்பு, பிறவுண்) தொடர்பு: S.குலேந்திரன், 9/1, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். (4745)

எம்மிடம் பிறிமா கோழிக் குஞ்சுகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சுட்டி, வட்டுதெற்கு, வட்டுக்கோட்டை. (4739)

1ஸ்ரீ 1000 மைனர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ரவீந்திரகுமார், 596/5, K.K.S.வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.(4764)

## மணமக்கள் தேவை

1972ஆம் ஆண்டு பிறந்த சதய நட்சத்திரம், 1963ஆம் ஆண்டு பிறந்த அனுஷ நட்சத்திரம் உடைய மணமகன்களுக்கும் (லண்டன் பிரஜாவுரிமை பெற்றவர்கள்), 1966 ஆம் ஆண்டு பிறந்த, 7இல் செவ்வாய் (50கிரகபாவம்), சைவபோசனமுள்ள மணமகளுக்கும் மணமக்கள் தேவை. தொடர்பு: கமலக கண்ணன் திருமண சேவை, இல.770, 772, பருத்தித்துறை வீதி, நல்லூர் (4335)

## வீடு விற்பனைக்கு

குருசோ வீதி, சுண்டுக்குளியில், சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் 51/2 நிலப்பரப்புடன் வீடு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விமல் யேசுதாசன், 214,கச்சேரி நல்லூா வீதி, யாழ்ப்பாணம். T.P 2438 (4751)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4763)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு:- சிவா, பருத்தித்துறை வீதி, (வட்டக்குளம் முன்பாக) கட்டப்பிராய். (4773)

## தவறிவிட்டது

சூசைப்பிள்ளை மனுவல்ராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.532893216V)யும், பேர்சுடன் சிறுதொகைப்பணமும் 08.06.2002 சனிக்கிழமை முகமாலை சோதன்னைச்சாவடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சூ.மனுவல்ராஜ், உயரப்புலம், ஆனைக்கோட்டை எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (4765)

## அகவை அறுபதில் சேவைநலன் பாராட்டு



வைத்திய கலாநிதி

**இ.கனகலிங்கம்**

*(தலைவர், அகில இலங்கை அரச சேவை சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம்)*

இலங்கை ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சேவையில் 1966ஆம் ஆண்டு தொடக்கம் 36 வருடங்கள் மக்கள் நன்மதிப்பைப் பெற்று கடமையாற்றிவரும்,

வைத்திய கலாநிதி **இராமலிங்கம் கனகலிங்கம்** அவர்கள் எமது பிரதேச சபை வைத்தியசாலையிலும் நற்சேவையாற்றி தமது அறுபதாம அகவையில் **இன்று (2002.06.12) புதன்கிழமை** அரச சேவையிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

அன்னார் தமது வைத்திய சேவையுடன் மக்களுக்குப் பொதுத் தொணடுகளும் ஆற்றி இறைவன் திருவருள் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் நோய், துன்பம் இன்றி சிறப்போடு நீடூழி வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

செயலாளர், பொறுப்பதிகாரி,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை,
(4736) உடுப்பிட்டி உப அலுவலகம், கரவெட்டி.

---

உ
சிவமயம்

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய புனராவர்த்தன ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா நூதன இராஜகோபுரப் பிரதிஷ்டா நவகுண்ட பக்ஷ

# மஹா கும்பாபிஷேகம்

*முருகன் அடியார்களே!*

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் வைகாசித் திங்கள் 30ஆம் நாள் நாளை (13.06.2002) வியாழக்கிழமை முற்பகல் 10.50 மணிமுதல 11.48 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் கலியுகவரதனாம் முருகப் பெருமானுக்கு குடமுழுக்குப் பெருஞ்சாந்தி எனப்படும் மஹகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது.

**கிரியைகள் விவரம்**

12.06.2002 புதன்கிழமை - எண்ணெய்க்காப்பு சாத்துதல் காலை 9.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை

13.06.2002 வியாழக்கிழமை - முற்பகல் 10.50 மணி தொடக்கம் 11.48மணிவரையுள்ள சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

*பிரதிஷ்டா பிரதம குரு:*

பிரதிஷ்டா பூஷணம் **சிவஸ்ரீ இரங்க வரதராஜக் குருக்கள்** அவர்கள்.

முருகன் அடியார்கள் யாவரும் மஹா கும்பாபிஷேகத்தைக் கண்டு தரிசித்தும் தொடர்ந்து 48 நாள்கள் நடைபெறவுள்ள மண்டலாபிஷேக நிகழ்வுகளிலும் பங்குபற்றி அருள் பெற்றுய்வீர்களாகுக!

*ஆலயத் தொண்டில்:*

வே.நடராசா, பெறுநர். ஆலய நிர்வாகசபையும், மேற்பார்வைக் குழுவும், இளந்தொண்டர்களும். (4753)

---

# Situations Wanted

Accounts, Administration over 30 years experience worked locally including NGOs and abroad. 56 years old gent seeks suitable employment.

**Adv. No. 1537, C/o Uthayan, Jaffna.** (4718)

---

# EXIDE

அதி உயர் வலிமை

சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கடினமான ஆற்றலுள்ள, இறக்குமதி செய்யப்பட்ட, துருப்பிடிக்க முடியாத வாகன பற்றரிகள் . இவை

- அமிலம் நிரம்பி வழிவதால் துருப்பிடிக்காது .
- வெப்ப உருக்குலைவுக்கு சிறிதும் இடமில்லை.
- அமில மட்டங்களை சரிபார்ப்பதற்கேற்ற தெளிந்த ஊடாக பார்க்கக் கூடிய இயல்பு.
- நீண்ட உழைப்பு. பாரம் குறைவு.



கடினறப்பர் பெட்டியிலும் உண்டு. 100 /120/ 150/ Amps.

குறைந்த பராமரிப்பும் கடின ஆற்றலும் கொண்ட எக்சைட் எந்நேரமும் மின்செறிவுடன் இருக்கும் குளோரைட் உற்பத்தி

**லங்கா நிப்போன்**

இல.18, ஹெர்சர் வீதி, கொழும்பு-11 தொலைபேசி 437735
இல. 10, ட்ரிலோனிபிறேஸ் (பால்சாலை பின்புறம்)
பம்பலப்பிட்டிசந்தி, கொழும்பு-4.
தொலைபேசி-589992, 582365.

---

# கீன் சென்ரர்

திருநெல்வேலி.

**2003 A/L**

சேதன இரசாயனம்
by:
*வாகீசன்*

*ஆரம்பம்:* **13.06.2002**
4.30 p.m. (ப.நே.)

புதன் / வியாழன் } 4.30 - 6.00 (ப.நே.)

குறிப்பு: மற்றைய பாடங்களும் விரைவில் ஆரம்பமாகும்.

(4762) - நிர்வாகி.

---



உ

## காரைநகர் வடக்கு அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான ஏககுண்ட சம்புரோக்ஷண

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா



அடியார்களே!

காரைநகரிலே வலந்தலை என்னும் குறிச்சியில் மருதமரத்தை ஸ்தல விருட்சமாகக் கொண்டு 250 ஆண்டுகளுக்கு முன்னர் நம்முன்னோரால் மருதடி என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வீரகத்தி விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான சித்ரபானு வருடம் வைகாசித் திங்கள் 30ஆம் நாள நாளை (13.06.2002) வியாழக்கிழமை ப[illegible]ல் 12.26 மணிமுதல் 1.08 மணிவரையுள்ள கன்னிலக்கின சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற விநாயகப் பெருமான் திருவருள் பாலித்துள்ளார். விநாயக அடியார்கள் அன்றும் அதற்கு முன்பும் பின்பும் நிகழும் கிரியாகாலங்களில் வந்து சுவாமி தரிசனம் செய்து வேண்டும் வரங்களைப் பெற்றுய்வீர்களாக.

## கிரியா கால விவரங்கள்

**10.06.2002** திங்கட்கிழமை **பூர்வாங்கக் கிரியைகள்** ஆரம்பமாகியுள்ளன.

இன்று**(12.06.2002)** புதன்கிழமை கால்ல 7.00 மணிக்குமேல் **ஸ்தூபி ஸ்தாபனம், தீப ஸ்தாபனம், யந்திர விம்ப ஸ்தாபனம், விசேடசாந்தி, யாகபூஜை, விசேட திரவிய ஹோமம், தீபாராதனை** நடைபெறும்.

காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை **பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல்** நிகழும்.

மாலை 5.00 மணிக்குமேல் **யாக பூஜை - விம்பசுத்தி, பூர்வ சந்தானம், தீபாராதனை** நடைபெறும்.

நாளை **(13.06.2002)** வியாழக்கிழமை காலை 9.00 மணிக்குமேல் **விநாயகர் வழிபாடு, யாகபூஜை, பச்சிம சந்தானம், மஹா பூர்ணாகுதி, தீபாராதனை, தேவஸ்தோத்திர கிரகதான சமர்ப்பணம்** என்பன நடைபெற்று -

பகல் 11.30 மணிக்கு **சுந்தர விமான ஸ்தூபி அபிஷேகம், கும்ப வீதிப் பிரதக்ஷணம** என்பன நடைபெறும்.

பகல் 12.26 மணிமுதல் **கன்னி லக்கினத்தில் மஹா கும்பாபிஷேகம் நிகழும்.**

தொடர்ந்து **தசதர்சனம், எஜமான் அபிஷேகம், ஆசார்ய சம்பாவனை, ஆசீர்வாதம், ஆசியுரை, மஹா அபிஷேகம், பிரசாதம் வழங்குதல்** என்பன நிகழும். மாலை திருவூஞ்சல் நடைபெற்று எம் பெருமான் **திருவீதியுலா** இடம்பெறும்.

*மருதடி,*
*காரைநகர்.*

(சி-22470)

**பொறுப்புரிமையாளர் சபையினர்.**

---

# CHUNDIKULI GIRLS' COLLEGE OLD GIRLS' ASSOCIATION, JAFFNA.

## THE ANNUAL GENERAL MEETING AND FELLOWSHIP LUNCH

*Date* - **Saturday 15th June 2002.**
*Venue* - **College Hall**

## AGENDA

*10.00a.m.* - Holy Communion & Worship Service at St.John the Baptist's Church, Chundikuli.

*12.00noon* - A.G.M

*1.00p.m.* - Lunch

*2.30.p.m. - 3.30.p.m* Games

*4.00p.m* , - Principal's tea

***Lunch Tickets** - Rs 125/=*

All old Girls are Cordially invited.

- **Secretary**

(C/22432)

உதயன்

## தடை நீக்கத்தில் புதுப் பிரச்சினை

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் விவகாரத்தில் மீண்டும் பிரச்சினை முளைக்கிறது.

ஆரம்பத்தில் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குவது குறித்து அரசாங்கம் அதிகம் சிந்தித்தது.

இலங்கையில் தடையை நீக்கினால் வெளிநாடுகளும் புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்கவேண்டி வருமோ என்பதுதான் அரசின் கவலையாக இருந்தது.

இலங்கை தடையை நீக்கினாலும் தாம் புலிகள் மீது விதித்த தடையை நீக்கப்போவதில்லை என்று வெளிநாடுகள் தெரிவித்துவிட்டன.

அதன் பிறகுதான் இலங்கை அரசு தடையை நீக்கினால்தான் புலிகள் பேச்சு மேசைக்கு வருவார்கள் என்ற நிலையில் தடையை நீக்குவது என்ற முடிவுக்கு வந்தது.

அதற்கு சிங்களப் பேரினவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. மகாசங்கமும் எதிர்ப்புத் தெரிவித்தது.

மகாசங்கத்தின் எதிர்ப்பைத் தணிப்பதில் அரசு வெற்றி கண்டது. மகாசங்கம் நிலைமாறியதும் பேரினவாத சக்திகளும் எதிர்க்கட்சிகளும் தடை நீக்கத்துக்கு எதிராகப் பேசியதெல்லாம் சிங்களப் பொதுமக்களின் காதில் ஏறவில்லை.

இவ்வகையான ஒரு சாதக நிலை தோன்றிய போதுதான் அரசாங்கம் புலித்தடையை நீக்குவது பற்றி அறிவித்தது.

அதாவது பேச்சுக்கான திகதி குறிப்பிடப்பட்டதும் அதற்குப் பத்து நாள்களுக்கு முன்னர் தடையை நீக்குவது என்று அரசாங்கம் தெரிவித்தது.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்று, புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காகவே அரசாங்கம் தடையை நீக்க முன்வந்தது.

பீடாதிபதிகளும் மற்றும் மகா சங்கத்தைச் சேர்ந்த பௌத்த குருமாரும் அடங்கிய குழு ஒன்று சமீபத்தில் ஜப்பான் சென்றிருந்தது.

அங்கே அந்தக் குழு, அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு அசைக்க முடியாத பூரண ஆதரவு தெரிவித்தது; கூட்டறிக்கை ஒன்றையும் விடுத்தது.

நாட்டிலே சமாதானம் மலரவேண்டும் என்று பீடாதிபதிகள் விரும்புகிறார்கள். சமாதான முயற்சிகளுக்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகிறார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு மகாநாயக்கர்கள் பாராட்டுத் தெரிவிக்கிறார்கள் என்று கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.


ஜப்பானிலிருந்து குழுவினர் திரும்பிய பின்னர் மல்வத்தை பீடாதிபதி ரம்புக்வெல ஸ்ரீ விபசிமகாநாயக்க தேரரையும் அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த மகாநாயக்க தேரரையும் சந்தித்து சமாதான முயற்சிகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதைத் தெரிவிக்க அமைச்சர் கரு ஜயசூரியா சென்றிருந்தார்.

புலித்தடை நீக்கத்தில் அவர்கள் இருவரும் ஒரே கருத்தையே தெரிவித்தனர் என்று செய்திகள் கூறுகின்றன.

அதாவது புலித் தடையை பேச்சு நடைபெறுவதற்கு முன்னர் நீக்குவது நல்லதல்ல என்று மகாநாயக்கர்கள் இருவரும் அமைச்சர் கரு ஜயசூரியவிடம் தெரிவித்திருக்கிறார்கள் என்பது செய்தி.

பேச்சுக்குப் புலிகளை வரவழைப்பதற்காகத்தான் அரசு தடையை நீக்கத் தீர்மானித்தது என்பது தெரிந்தும், தடையைப் பேச்சுக்கு முன்னர் நீக்கக்கூடாது என்று மகாநாயக்கர்கள் கூறுவதன் அர்த்தம் என்ன? பேச்சு வேண்டாம் என்பதா? சமாதானத் தேடல் தேவையில்லை என்பதா?

ஜப்பானில் விடுத்த கூட்டறிக்கைக்கும் இலங்கை மண்ணில் இருந்து கூறும் கருத்துக்கும் எவ்வளவு முரண்பாடு! மகாசங்கமே சமாதான முயற்சிக்கு இப்படிச் சிக்கலை ஏற்படுத்தலாமா?



யாழ்.செயலகத்தின் முன்பாக நேற்று மறியற் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களை பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றினர். செயலக வாயில்களில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமையை மேலேயுள்ள மூன்று படங்களிலும் மறியற் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களை பொலிஸார் அங்கிருந்து அப்புறப்படுத்துவதை கீழுள்ள படங்களில் காணலாம்.

### அமைதியான ஹர்த்தால் மூலம்

# தமிழ் மக்களுடைய ஏகோபித்த ஆதரவை வெளிக்காட்டுவோம்!

## மனிதநேய ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்12

இன்று நடைபெறவுள்ள பூரண ஹர்த்தால் தமிழ் மக்களின் ஏகோபித்த - ஒன்றுபட்ட பூரண ஆதரவை வெளிக்காட்டுவதாக அமையவேண்டும்.

- இவ்வாறு இன்று குடாநாடெங்கும் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டத்திற்கு ஆதரவு கோரி யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று நடைபெறவுள்ள பூரண ஹர்த்தால் ஒரு சில சலுகைகளுக்காவோ, அன்றி தனிப்பட்ட அமைப்பாலோ நடத்தப்படுவது அல்ல. இப்போராட்டம் தமிழ் மக்களின் ஏகோபித்த ஒன்றுபட்ட பூரண ஆதரவை காட்டுவதாகவே அமைய வேண்டும். பதவிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னனி அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட காட்டிய ஆர்வம், அதே ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்கின்ற விடயங்களை செயற்படுத்துவதில் காட்டப்படவில்லை; காலம் தாழ்த்துகின்றது.

தமிழ்ப் பிரதேசங்களில் இயல்பு நிலையை தோற்றுவிப்பதற்குப் பதிலாக பதற்றமான சூழலை உருவாக்க முனைகின்றது.

அரசின் இச்செயல் சமாதான முயற்சியை கேலிக்கூத்தாக்கி விடுமோ என்ற ஐயப்பாட்டை உருவாக்குகின்றது. ஆகவே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை உடனடியாக நிறைவேற்ற அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை அரசிற்கு மட்டுமல்லாமல் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக்காட்ட இக்ஹர்த்தால் போராட்டம் எந்தவித அசம்பாவிதமும் இன்றி அமைதியான முறையில் நடைபெற அனைத்து மக்களும் பூரண ஒத்துழைப்பை தரும் வண்ணம் வேண்டுகின்றோம் - என்று உள்ளது.

இதேவேளை இக்ஹர்த்தால் போராட்டத்துக்கு பல்வேறு அமைப்புக்களும் தொடர்ந்து தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

### வடபிரதேச இந்துப் பேரவை

வடபிரதேச இந்துப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் நாட்டில் நீடித்த நிலையான சமாதானம் ஏற்படும் என்ற மக்களது எதிர்பார்ப்புக்குப் பதிலாக தற்போது நாட்டில் அச்ச நிலையே மேலோங்கி வருகிறது. நிலையான சமாதானத்தை வேண்டி இன்று நடத்தப்படும் ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பினை நல்குமாறு குறிப்பாக இந்துக்களையும், இந்து சமய நிறுவனங்களையும் வலியுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்றைய தினம் இதற்காகப் பிரார்த்தனையில் ஈடுபடுமாறும் வேண்டுகின்றோம் - என்று உள்ளது.

### தெங்கு பனம்பொருள் சமாசம்

வடமாகாண தெங்கு பனம்பொருள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாடு தழுவிய வகையில் இன்று நடைபெறும் பூரண ஹர்த்தாலுக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றோம். எமது அங்கத்துவ சங்கங்கள் அனைத்தும் தமது அலுவலகங்களையும், கிளை நிலையங்களையும் மூடி உற்பத்திகளை மறுநாளே கொள்வனவு செய்து விற்பனைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். எமது பூரண ஒத்துழைப்பை வழங்கி ஹர்த்தாலை வெற்றிபெறச் செய்வோம் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## வாரநாள்களில் காலையில் ரியூசன் வகுப்புகள் இல்லை

### மட்டு.தனியார் கல்வி நிறுவனங்கள் முடிவு

மட்டக்களப்பு,ஜூன்12

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்குகின்ற தனியார் கல்வி நிறுவனங்களில் காலைநேர வகுப்புகள் இனித் திங்கள்முதல் வெள்ளி வரை நடைபெறமாட்டா.

பாடசாலைக்கு மாணவர்கள் தாமதமாக வருகின்றார்கள் என்று பாடசாலை அதிபர்கள் தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்தனர். இதனையடுத்தே காலைநேர வகுப்புகளை நடத்துவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம், மாணவர்களின் நலன் கருதி மேலும் சில முடிவுகளை மேற்கொண்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவேண்டும் என்பதால், காலை 11 மணிவரை வகுப்புகள் இடம்பெறமாட்டாது.

இரவு 7 மணிக்குப் பின் வகுப்புகள் நடத்தப்படமாட்டாது.

தனியார் கல்வி நிறுவனங்களில் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. (ம)

### நாளை

வைகாசி 30
வியாழக்கிழமை
(13.06.2002)
திதி : திருதியை
பின்னிரவு 3.19 வரை.
நட்சத்திரம்: புனர்பூசம்
நள்ளிரவு 12.55 வரை.
சுபநேரம் : 7.22 - 8.52
ராகுகாலம்: 1.22 - 2.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உண்மையை அறிவது ஞானம்; உண்மையை நம்புவது பக்தி; உண்மையாக நடப்பது மார்க்கம்.

### விடுதலைப் புலிகள் மீதான

## தடை நீக்கத்திற்கு எதிராக விரைவில் நீதிமன்றில் மனு

கொழும்பு,ஜூன்12

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டாம் என்று கோரும் மனு ஒன்று விரைவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

பல்துறை சார்ந்த நிபுணர்கள் குழு ஒன்றினால் தாக்கல் செய்யப்படவிருக்கும் இந்த மனுவில், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதால் நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் இருப்பதாகவும்-

அதனால் அவர்கள் மீதான தடையை நீக்கக்கூடாது எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் பேச்சுக்கு 10 நாள்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருப்பதையடுத்தே இந்த மனுவை தாக்கல் செய்வதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகக் கூறப்பட்டது. (ம-4-12-ரி)

## விமான சேவை ரத்து!

யாழ்ப்பாணம்,ஜூன்12

இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையில் எக்ஸ்போ விமானச் சேவை இன்று புதன்கிழமை நடத்த இருந்த விசேட சேவை ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக விமான சேவையின் முகவர் அலுவலகம், அறிவித்துள்ளது.

இன்றைய விசேட சேவையில் பயணம் செய்ய பயணச்சீட்டைப் பெற்றவர்கள் நாளை வியாழக்கிழமை பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3)

மாதகல் புனித அந்தோனியார்

## ஆலயப் பெருவிழா



இம்மாதம் 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாள்கள் ஆரம்பமாகி இன்று (12.06.2002) புதன்கிழமை 5.30 மணிக்கு திருச்செபமாலையும் நற்கருணை ஆராதனையும் நாளை (13.06.2002) வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

(4758) பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.


# கரம்பொன் இறங்குதுறையில் கடற்படையின் புதிய முகாம்

ஊர்காவற்றுறை,ஜூன்12

அனலைதீவு, எழுவைதீவு, நயினா தீவு போன்ற தீவுப்பகுதிகளுக்கான படகுச்சேவை நடைபெற்றுவரும் ஊா காவற்றுறை கரம்பொன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் புதிய முகாம் அமைக்கும் பணியில் கடற் படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த சனிக்கிழமைமுதல் கடற படையினர் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இறங்குதுறை செல்லும் வாயிலில் ஈ.பி.டி.பியினரால் கட்டப்பட்டு, அவர் கள் நிலைகொண்டிருந்த கட்டடத்தி லேயே தற்பொழுது கடற்படையினர் முகாமிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இறங்கு துறைக்குச் செல்லும் பயணிகள் வாக னங்களில் இருந்து இறக்கப்பட்டு கடற்படையினரால் அடையாள அட் டைகள் பரிசீலிக்கப்பட்டு வருவதுடன், இறங்குதுறைவரை நடந்து செல்லு மாறு பணிக்கப்படுவதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

அதேவேளை -

இறங்குதுறை பாலத்திலும் கடற் படையினர் காப்பரண்கள் அமைத்து வருவதால் பயணிகள் மற்றும் பொருள்களை படகுகளில் ஏற்றி இறக்குவதற்கு இடையூறாக உள்ள தாக பயணிகள் கவலை தெரிவித் துள்ளனர்.

அண்மையில் ஊர்காவற்றுறை புளியங்கூடல் பகுதியிலும் கடற்படை யினா புதிய முகாம் ஒன்றை அமைத துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-16)

## டிறிபேக் கல்லூரி மாணவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்12

இடம்பெயர்ந்து வேறு பாடசாலை களில் கல்விகற்றுவரும் சாவகச் சேரி டிறிபேக் கல்லூரியைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களும், இரண்டாம் முறையாக இப்பரீட்சைக் குத் தோற்றவுள்ள மாணவர்களும் நாளை வியாழக்கிழமைக்குமுன் அதிபரைச் சந்திக்குமாறு கேட்கப் படுகின்றனர். (ம)


## தேவை

சமையல் தெரிந்த சிற்றூழியர் தேவை.

தொடர்பு:

இல.140, பலாலி வீதி,
திருநெல்வேலி
(பரமேஸ்வராச் சந்திக்கு அருகில்). (4738)


## நான்காம் ஆண்டின் நீங்கா நினைவுகள்

தோற்றம் 17 - 05 - 1931



மறைவு 27 - 05 - 1998

### அமரர் வைத்திலிங்கம் கனகரெட்ணம்

(யாழ்.மாநகரசபை முன்னாள் சாரதி)

திதி: 12-06-2002

ஈரிரண்டு ஆண்டுகள் இமைப் பொழுதில் மறைந்ததப்பா!
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

புகையிரத வீதி,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள். (4614)

## விண்ணக வாழ்வின் 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 13 - 12 - 1932



விண்ணில் 12 - 06 - 1994

### செல்வி சரோஜினிதேவி தில்லையம்பலம்


(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/க.ம.ம.வி.)

பாரினில் புகழ் ஓங்க மாண்புடன் வாழ்ந்த
எம் அன்பு அன்ரியம்மாவே!
எம்மை விட்டுப் பிரிந்தோடி எட்டு ஆண்டுகள் சென்றாலும்
எம் பாசதீபம் என்றும் அணையாது!

என்றும் உங்கள் நினைவில் வாடும்:
அன்புப் பெறாமக்கள்
வி.அரவிந்தன (London),
வி.அகிலன்.

103, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (4704)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஈழத் தமிழகத்தின் இணையில்லாத் தேர்க்கலையின்
வேந்தனென வாழ்ந்த ஏந்தலே...
நீ செய்த தேர்களெல்லாம்
சான்றோர் கவிதைகளாய் – ஈழக்
கலை மரபின் சாட்சிகளாய்
காலமெல்லாம் நிலைத்திருக்கக்
கண்மூடிக் கொண்டாயே......
ஓராண்டு காலம் ஓடிவிட்டதென்றாலும்
ஓராயிரம் வருடம் உன் பணிகள்
தான் தொடரும்.

\- குடும்பத்தினர்.

கலாபூஷணம் சிற்பச்சக்கரவர்த்தி
ஸ்தபதி

## ஆ.ஜீவரட்ணம் ஆச்சாரியார்

தோற்றம் 16.08.1938

மறைவு 24.05.2001

## ஆறுமுகம் சிற்பாலயம்

காளிகோயிலடி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 021-2892

(4760)

# எல்லோரும் எங்கும் அமைதி கிடைக்குமா?

## அழிவின் விளிம்பில் நாம்...!

**ஆத்ம சொரூபன்**

**சிந்தனைத் தொடர் - 3**

யுத்தத்தின் கோரப்பிடிக்குள் அகப்பட்டவர்கள் அமைதிக்காக ஏங்கித் தவிக்கிறார்கள். இதற்கு மேற்குலகம், கிழக்குலகம் என்ற வேறுபாடில்லை. அமைதி மனித உயிரினங்களுக்கு மட்டுமல்ல எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது; விரும்பப்படுவது. அமைதியை மனிதன் யுத்தத்தினால் மட்டும் இழப்பதில்லை. அமைதியை இழந்தவர்களாலேயே யுத்தங்கள் ஏற்படுகின்றன. ஆதாயம் தேடும் நோக்கத்திற்காக, நாடுகளின் அமைதியைக் குழப்பி, யுத்தத்திற்கு வழி வகுத்து விடுபவர்களும் இருக்கிறார்கள். யுத்த தளபாடங்களை உற்பத்திசெய்து, சந்தைப்படுத்தி பணம் ஈட்டும் நாடுகள் இத்தகைய கைங்கரியத்தை வெகுகச்சிதமாக செய்து முடித்து விடுகின்றன. இதற்குப் பலர் ஏமாந்து பலியாகிறார்கள். ஏமாறுபவன் இருக்கும் வரைக்கும் ஏமாற்றுபவனும் இருபபான். பிறர் அழிவில் பணம் சம்பாதிககும் மனிதநேய மற்ற இழிநிலை இது.

அமைதி என்று இன்று பொதுவாகக் கருதப்படுவது ஆயுதங்கள் கீழே போடபபடுவதைத்தான். இந்த வகையிலே பார்த்தால் அமைதி இரண்டு வகைப்படும் ஒன்று புற அமைதி மற்றையது அக அமைதி.

*புறத்தூய்மை நீரினால்*
*அமையும்*
*அகத்தூய்மை வாய்மையினால்*
*காணப்படும்*

என்று குறள் கூறுவதுபோல புற அமைதி சட்டத்தினால் பேணப்படும் அக அமைதி நிறைவினால் எய்தப்படும்.

செல்வம் என்பது சிந்தையின் நிறைவே! என்று ஔவையார் கூறியதுபோல ஒருவனிடத்தே நிறைவு இல்லாத போதே அக அமைதிக் குலைவு ஏற்படுகிறது.

மேற்குலகில் Silence என்றால் புற அமைதிதான். இதே போலத்தான் Discipline என்றால் புறச் செயலால் கொடுக்கப்படும் மரியாதையைத்தான் குறிக்கும். ஆசிரியர்களைக் கண்டால் எழுந்து Goodmorning சொல்வது, பொலீஸார், இராணுவத்தினர் தத்தமது உயர் அதிகாரிகளைக் கண்டால் தொப்பியை அணிந்து கொண்டு சலூட்டடிப்பது (Salute) இவைபோன்றவைதான். ஆனால் கீழத்தேய பண்பாட்டில் சாந்தி என்ற வடமொழிச் சொல் உள் அமைதியையே மட்டும் குறிக்கும். ஆகவே சாந்தி Silence ஆகாது. ஒழுக்கம் என்று இங்கே கூறப்படுவது உள்ளம் சார்ந்த நெகிழ்வான முறையில் நன்நெறியோடு இருத்தல். ஆகவே ஒழுக்கம் Discipline ஆகாது.

மேலைத்தேயத்தவரது வாழ்க்கை, குற்றச்செயல்கள் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. 'We Believe the Rule Of Law' 'நாம் சட்டத்தினது ஆடசியை நம்புகின்றோம்' என்று பறங்கித்துரையின் பாத்திரம் வீரபாண்டியக் கட்டப்பொம்மன் படத்தில் கூறுவது இங்கு கவனிக்கப்படத்தக்கது. ஆனால் கீழைத்தேயத்தவரது வாழ்க்கை முறை, குற்றச் செயல்கள் எல்லாம் உயர்ந்த, கலாசாரத்தால் கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால், மேற்கத்தேய படையெடுப்புக் களால் கடந்த சில நூற்றாண்டுகளாக ஏற்பட்ட கலாசாரச் சிதைவால், சடங்கள் புகுந்த நிலையில் அனர்த்தங்கள் நிகழ்கின்றன. மனிதத்துவம் அழிந்துவிட்டது. இன்றைய இழி நிலையை வைத்து இந்நாட்டு உயர்நத பாரம்பரியங்களை இழிவாக நோக்கக் கூடாது. அக அமைதிக்குலைவே, புற அமைதிக்குலைவுக்குக் காரணம் ஆகும். புற அமைதிக்குலைவிலும் அக அமைதியைப் பேணமுடியும் என்பதற்கு ஆதாரம் உண்டு.

புற அமைதிக்குலைவை, பாரிய யுத்தங்களை முற்றாகத் தவிர்ப்பதற்கு அக அமைதி பேணப்பட்டே ஆகவேண்டும். அல்லாதவிடத்து தற்காலிக புற அமைதி, யுத்தநிறுத்தங்கள் மட்டும் ஏற்படும்.

*அன்பு + சொல் = உண்மை*
*அன்பு + செயல் = அறம்*
*அன்பு + அனுபவம் = அமைதி*
*அன்பு + புரிந்துணர்வு = அஹிம்சை*

*அன்புடன் கூடிய வாழ்கை* அனுபவம்தான் அக அமைதியைத் தருமே தவிர கபடத்துடன் கூடிய அனுபவமல்ல. கபடம் என்பது திரிகரண சுத்தியில்லாத நிலையாகும். ஒன்றை நினைப்பது, வேறொன்றைச சொல்வது, இன்னும்மொன்றைச் செய்வது. இந்தக் கபடம் அன்பை ஏற்படுத்துமா? இந்தக் கபடம் பிறரை அழித்து ஆதாயம் தேடுவதற்கே.

ஆகவே, கபடம் அன்பின் விரோதி. அன்பு என்றால் என்ன முத்தமிடுவதா? வசதி படைத்தோர்க்கு தேநீர் விருந்து அளிப்பதா? பிறந்தநாள் விழாவில் பரிசுகள் வழங்கிக் கொண்டாடுவதா? இல்லை. எம்முன்னே ஒருவர் துன்பப்படும்போது அவரது துன்பத்தைப் போக்கமுயலவேண்டும். துன்பத்தை நீக்கமுடியாத சந்தர்ப்பத்தில அவரது துன்பத்தில் பங்கேற்கவேண்டும். விலகாது இணைந்திருக்கவேண்டும். இத்தகைய நிலைதான் அன்பு நிலை. வாழ்க்கையிலே விரக்தியடைந்தால் தன்னையே அழித்துக்கொள்கிறார்கள் சிலர். ஒருவனை எதிரியாக்கி, அவனை அழிக்க முயன்று அழிந்து போபவரும் இருக்கிறார்கள். உறவு இல்லாத இன்னொருவரின் நலனுக்காக உயிரையும் இழக்கத் தயாராயுள்ளவர்கள் இன்று இருக்கிறார்களா? அப்படி இருந்தால் அவர்கள்தான் அன்புடையவர்கள். இத்தகையவருக்கே அனுபவம் அக அமைதியைக் கொடுக்கும். இந்த வரிசையிலே மகாத்மா காந்தி அடிகள், சுவாமி விவேகானந்தர்..... என்று பலர் இருந்தார்கள். அதனால்தான் உலகம் இந்த நிலையிலாவது இருக்கிறது. இத்தகையவர்கள் இருந்தபடியினால்தான் இந்த விடயங்கள்கூட எழுதப்பட்டிருக்கிறது.

ஆறு பேர் கொண்ட குடும்பத்தில ஒருவன் அட்டகாசம் செய்தால் அக்குடும்பத்திலுள்ள அனைவரினதும் அமைதி கெட்டுவிடும். இதுபோலத்தான் ஒரு குடும்பத்தின் அமைதிக் குலைவு அக்கிராமத்தின் அமைதியைப் பாதித்துவிடும். ஏன், இன்று ஓர் ஒஸாமா பின்லேடனின் அமைதிக் குலைவு ஒரு வினாடியில் 10,000 பேரது உயிரைப் பலிகொள்ளவில்லையா? உலகத்தைப் பீதியில் ஆழ்த்தவில்லையா? வல்லரசான அமெரிக்காவின் போக்கையே மாற்றி அமைக்கவில்லையா? எனவே, உலக அமைதி ஒவ்வொருவரினதும் அக அமைதியில் சார்ந்திருக்கிறதல்லவா? எனவே, ஒவ்வொருவரினதும் அகஅமைதிக்கு கல்வி, ஆன்மீகம் என்பவை பங்களிக்காதவரை உலக அமைதி ஒரு கேள்விக்குறியே. ஆனால் தற்காலிக புற அமைதி, யுத்தநிறுத்தம் மட்டும் ஏற்படக்கூடும். இது அமைதியா? புற அமைதி கெடடாலும் அகஅமைதி கெடாது இருககலாம் என்பதைத் திருநாவுக்கரசு நாயனார், பிரகலாதன், யேசுநாதர் ' ஆகியவர்களின் வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது. நாவுக்கரசரை கல்லுடன் கட்டிக் கடலில் போட்டபோதும் அது தெப்பமாக மிதந்து காப்பாற்றியது. சுண்ணாம்பு நீற்றறையில் இட்டபொழுதும் குளிர்ச்சியைக் கொடுத்தது. யானையைக் கொண்டு மிதிக்கச் செய்த பொழுதும், மலையிலிருந்து தூக்கி வீசிய பொழுதும் பிரகலாதனுக்கு எதுவும் நிகழவில்லை. காரணம், இறைநாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்ததால். கொடுமை செய்தவர்கள் மீது வெறுப்புக்கொள்ளாததால். சிலுவையில் .யேசுநாதரை அறைந்தபொழுதும், 'பிதாவே அறியாமல் செய்கிறார்கள் அவர்களை மன்னியும்' என்று எப்படிக் கூற முடிந்தது? இவையெல்லாம் அக அமைதி கெடாதபடியினாற்தான். இவ்வாறு அவர்கள் வாழ்ந்து காட்டியும் அப்பாதையில் செல்லாது கபடமான வழியில், பிறர் அழிவில் பணம் சம்பாதிப்பதையே எண்ணமாகக் கொள்ளும் நாம், இந்து என்றும் கிறிஸ்தவரென்றும்.... சொல்லிக்கொள்வது எவ்வாறு பொருந்தும்? இது அவர்களை - அவர்களின் போதனைகளை - இழிவுபடுத்துவதாகவில்லையா?

தலை வலிக்கும் பொழுது ஐயோ! தலை வலிக்கிறதே என்று சொல்லி தலையை நினைத்துக் கொண்டிருக்கிறோம். தலை வலிக்காது. ஆரோக்கியமாகவிருக்கும்பொழுது ஆரோக்கியமாக இருக்கிறதே என்று தலையை நினைத்து ஆனந்தமடைகிறோமா?

இல்லை. அப்பொழுது ஆரோக்கியத்திற்குக் கேடான விடயங்களில் அல்லவா ஈடுபடுகிறோம். அதனால் தானே தலை வலித்தது அமைதி கிடைத்த பொழுதெல்லாம் அமைதியை எண்ணி நாம் ஆனந்தப்படாது, அமைதியைக் கெடுக்கும் செயல்களிலல்லவா ஈடுபடுகிறோம். பின்னர் அமைதி கெட்டபொழுது அமைதிக்காக ஏங்குகிறோம். இல்லாததற்காக ஏங்குகிறோம்.இதையே வாழ்க்கையாக அமைத்துக்கொண்டோம்.

அமைதியைப் பெறுவதற்கு வழி அமைதியைப் பற்றிச் சிந்திப்பதே தவிர அமைதியீனத்தையல்ல. அமைதிக் கேட்டை ஏற்படுத்தும் செயல்களையல்ல.

அமைதியைக் கெடுக்கும் கலாசாரச் சிதைவு இங்கும் எங்கும் தொடர்கிறது. அதை அறிந்து தடுக்க வேண்டாமா? *(அடுத்த வாரம் தொடரும்)*

## மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம்,ஜூன்12

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கொட்பிரி குணதிலக தலைமையில் ஐவர் கொண்ட குழு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளது.

இக்குழு நேற்றுமுன்தினம் காலை இங்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்பட்டுப் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஆனால், மாலை 6 மணிக்கே குழு இங்கு வந்து சேர்ந்ததால் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டன.

இக்குழுவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான என்.செல்வக்குமாரன், திருமதி மனோகரி முத்தெட்டுவேகம, சரத் குரே, செயலாளர் ஆர்.சி.கருணாகரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

(ம-3-10)

## மரதன் ஓட்டம்

ஊர்காவற்றுறை,ஜூன்12

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி தினத்தை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மரதன் ஓட்டப் போட்டி இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டி பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

இதேவேளை -

மறுநாள் கல்லூரி தினத்தன்று பழைய மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் இடையே சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி மாலை 3 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக பழைய மாணவர் சங்கச் செயலாளர் வி.ஆர். ஜெரால் அன்ரனி தெரிவித்தார்.

(ம-16)

## வேம்பொடுகேணி மாணவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்12

இடம்பெயர்வு காரணமாக பிற பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடம் விண்ணப்பப்படிவங்களில் கையொப்பம் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

நாளை பளை மத்திய கல்லூரியிலும் மறுதினம் கொடிகாமத்திலுள்ள பளை கோட்டக் கல்வி அலுவலகத்திலும் இந்த ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (ம-13)

## கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் கால்நடைகளால் பயிர்கள் சேதம்!

### சம்மேளனத்திடம் விவசாயிகள் முறைப்பாடு

அரியாலை,ஜூன்12

கோப்பாய், நீர்வேலிப் பகுதி தோட்டங்களில் விளைந்துள்ள பயிர்கள் கால்நடைகளால் அழிக்கப்படுவதாக விவசாயிகள் விவசாய சம்மேளனத்திடம் முறையிட்டுள்ளனர்.

அப்பகுதிகளில் கால்நடைகளை வளர்ப்பவர்கள், அவற்றை அவிழ்த்து விடுவதால், அவை தோட்டங்களுக்குள் நுழைந்து பயிர்களை மேய்ந்து விடுவதாகவும் -

இதனால் முழு அளவிலான விளைச்சலைப் பெறமுடியாது போய் விடுவதாகவும் -

விவசாயிகள் தெரிவித்தனர்.

இத்தகைய சம்பவங்களால் கால்நடைகளை வளர்ப்பவர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே மோதல் சம்பவங்களும் இடம்பெற்றுள்ள போதிலும், தொடர்ந்து கட்டாக்காலி கால்நடைகளால் தோட்டப் பயிர்கள் நாசமாக்கப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-17)

### வடக்கு - கிழக்கு அபிவிருத்தி

## வெளிநாட்டு உதவிகளை முறையாக கையாள விசேட குழு நியமிக்கப்படும்

கொழும்பு,ஜூன்12

வடக்கு - கிழக்கு பகுதிகளில் வெளிநாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை உட்படப் பல வெளிநாட்டு நிறுவனங்கள், பொது அமைப்புகள் வடக்கு - கிழக்கு பிரதேச அபிவிருத்திக்கு உதவி வழங்கி வருகின்றன. ஆயினும் கடந்த கால உதவிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை.

ஆகவே இனி வழங்கப்படும் நிதி மற்றும் உதவிகளையாவது சீரான முறையில் கையாண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளைச் சரியாக நடைமுறைப்படுத்துவதே இந்தக் குழு நியமிப்பதன் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் இந்தியாவிலிருந்து திரும்பியவுடன் இந்தக் குழுவின் நியமனம் இடம்பெறும்.

(ம)

## புனர்வாழ்வு அமைச்சு ஆதரவுடன் வன்னியில் நடமாடும் வைத்திய சேவை

கிளிநொச்சி,ஜூன்12

புனர்வாழ்வு மற்றும் அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் வன்னியில் நடமாடும் வைத்திய சேவை முகாம்களை நடத்த இருக்கின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களில் இந்த வைத்திய சேவை முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

நோய்கள் தொடர்பான விளக்கவுரைகளும் இந்த முகாமில் இடம் பெறும் என்று புனர்வாழ்வு மற்றும் அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா தெரிவித்தார்.

அதேவேளை -

அந்தப் பிரதேசத்தில் உள்ள விதவைகள், ஊனமுற்றவர்கள், அங்கவீனர்கள் ஆகியோருக்கு உதவும் திட்டங்கள் சமூக நல அமைச்சின் உதவியுடன் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்றும் அவர் சொன்னார்.

(ம-3)

## படகு புறப்படும் நேரம் மாற்றப்பட்டது

ஊர்காவற்றுறை,ஜூன்12

காரைநகரில் இருந்து ஊர்காவற்றுறைக்கு இழுவைப் படகு புறப்படும் நேரம் காலை 8.30 மணியிலிருந்து 8 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது.

காரைநகரிலிருந்து ஊர்காவற்றுறைக்கு தினமும் கடமைக்குச் செல்லும் அரச ஊழியர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் மேற்படி நேரமாற்றத்தை செய்துதருமாறு காரைநகர் கடற்படை பொது மக்கள் அதிகாரிக்கு அண்மையில் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தனர்.

இதனையடுத்து கடற்படையினரால் நேற்றுமுன்தினம் முதல் மேற்படி நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனினும் எதுவித முன்னறிவித்தலுமின்றி நேற்றுமுன்தினம் காலை 8 மணிக்கே இழுவைப்படகு புறப்பட்டதால் பயணிகள் பலர் 10 மணிக்கு நடைபெறும் சேவையிலேயே ஊர்காவற்றுறையைச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-16)

## புனர்வாழ்வு அமைச்சு ஆதரவுடன் மூன்றுநாள் வர்த்தகக் கண்காட்சி

### யாழ்.மத்திய கல்லூரியில் நடக்கும்

கொழும்பு,ஜூன்12

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் இந்த மாத இறுதியில் தென்பகுதியைச் சேர்ந்த வர்த்தக நிறுவனங்களின் மூன்று நாள் வர்த்தகக் கண்காட்சி இடம் பெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகி 23 ஆம் திகதிவரை தொடர்ந்து இடம் பெறும்.

இதன் மூலம் தென்பகுதி வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளமுடியும் எனவும் -

தமது வர்த்தக நடவடிக்கைகள் குறித்த அனுபவங்களை தென்பகுதி வர்த்தகர்கள் யாழ். வர்த்தகர்களுடன் பகிர்ந்துகொள்ள வசதியளிக்கும் எனவும் -

அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-12)

## கணனிப் பரீட்சை

2001ஆம் ஆண்டில் பாடசாலைகளில நடைபெற்ற முறைசாராக் கல்வி நெறியின்கீழ் கணனிப்பயிற்சி நெறியைக் கற்றோருக்கான இறுதிப்பரீட்சை எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு இவர்களுடைய அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக்வும் -

அவைகளை சம்பந்தப்பட்ட அதிபர்களிடம் பெற்று பரீட்சைக்குத் தோற்றுமாறும் யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ம-51)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பரிசுத்தினம் - 2002

*காலம்:* 14.06.2002 வெள்ளிக்கிழமை மு.ப. 9.45 மணி
*இடம்:* குமாரசுவாமி மண்டபம்
பிரதம விருந்தினர்:
**திரு.செ.சி.பூலோகசிங்கம்**
*பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) வெளிவிவகார அமைச்சு*
*பரிசில் வழங்கல்:*
**திருமதி ஜெயமணி பூலோகசிங்கம்**
***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். (C/22457) அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

## வீதி திருத்தப்படாததால் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜுன்12

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் இருப்பதால் பயணிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

மேலும் இவ்வீதியிலேயே சமூகத் தன்னார்வத்தொண்டு நிறுவனமான மனித முன்னேற்ற நடுநிலையமும் புனித சாள்ஸ் ஆரம்பப் பாடசாலையும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ம-13-ரி)

## TITAN
### The New World Watch

பல வருடங்கள் உத்தரவாதத்துடன், உலகப் பிரசித்தி பெற்ற TITAN கைக்கடிகாரங்களை விற்பனை செய்யும் **அரிய வாய்ப்பு.**

- யாழ்ப்பாணம்
- வவுனியா
- கிளிநொச்சி
- மட்டக்களப்பு

ஆகிய பிரதேசங்களில் TITAN கைக்கடிகாரங்களை விற்பனை செய்யும்
**ஏக விநியோகஸ்தர்கள் தேவை.**

அடிப்படைத் தகுதி
வங்கி உத்தரவாதம் அல்லது வைப்புப்பணம் செலுத்தும் தகைமை.
14 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.
முந்துங்கள். முதலில் தொடர்பு கொண்டு இந்த அரிய வாய்ப்பை வெல்லுங்கள்.

GOOD VALUE
**GOOD VALUE DISTRIBUTORS (PVT) LTD.**
104/11, Grandpass Road, Colombo - 14.
Tel : 074-796726 Fax 01 - 336033

SKY LINE

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை, மல்லாகம்
# கேள்வி அறிவித்தல் - 2002

கீழ்க்குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் "இக்ராட்" நிறுவனத்தில் 'ரூம் எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

*கேள்விப்பத்திரம் வழங்கப்படும் கடைசித் திகதி* : 25.06.2002 காலை 10.00 மணிவரை
*கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி* : 25.06.2002 பிற்பகல் 3.00மணிவரை
*கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி* : 26.06.2002, காலை 10.00 மணி

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *"தலைவர், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்"* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கும் எதிர்வரும் 25.06.2002ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | குருநாதசுவாமி கோயில் வீதி, தெல்லிப்பழை | 1500/- | 250/- |
| 02. | இக்கிரானை வீதி, மல்லாகம் | 2000/- | 300/- |
| 03. | தொந்தனை வீதி, தெல்லிப்பழை | 500/- | 250/- |

இது தொடர்பான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

*வலிகாமம் வடக்கு பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம்,*
*(காங்கேசன்துறை) மல்லாகம்.*
*10.06.2002*

**திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன்** ஜே.பி.யு.எம்.,
தலைவர்

(C/22486)


## தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழு உறுப்பினர் தொடர்பான
# அறிவித்தல்

மேற்படி சங்கக் கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்கள் 23-06-2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு விளம்பரத்தில் கூறப்பட்ட இடங்களில் நடைபெறவுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டம் சம்பந்தமான அறிவித்தல்களை கைதடி வாக்காளர்கள் அந்தந்தக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம். கிளை இல. 5,6,10இல் உள்ள வாக்காளர்கள் அறிவித்தல்களை நாவற்குழிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம். கிளை 7,8இல் உள்ள வாக்காளர்கள் கைதடி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்குறிப்பட்ட இடங்களில் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் 15.06.2002 ஆம் திகதிக்குப் பின்னர் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கூட்ட அறிவித்தல்கள் கிடைக்காத பட்சத்தில் 23.06.2002ஆம் திகதி நடைபெறும் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்தில் தனது அங்கத்துவத்தையும் 100/- பங்கையும் உறுதிப்படுத்தி தவிசாளருடன் தொடர்புகொண்டு கூட்டத்தில் பங்குபற்றி வாக்களிக்கலாம் என்பதனை அறியத்தருவதுடன் கிளைக்குழு உறுப்பினர் தெரிவு ஒழுங்காக நடைபெற ஒத்துழைக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
**தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம்,**
**கைதடி.** (C/22482)

## உங்கள் கனவுகளை கலைத்து விடுங்கள்



அது
இதோ
இருக்கிறது!

**மராயின் எலெக்ரிக்கல் உத்தியோகஸ்தர்கள்**
**MARINE ELECTRICAL OFFICER**

பாடநெறி 04-ஜூலை - 2002 இல் ஆரம்பம்.

**11ஆவது உள்வாங்கல்**

கடற்கலங்களில்(ships) மின்சார அதிகாரியாகும் வாய்ப்பை அளிக்கும்
சீ.டீ.சீ (Continuous Discharge Certificate)சான்றிதழ் பெற
இதோ உங்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு!

அனுமதிக்கு வேண்டியவை

- தேசிய தொழில்நுட்ப டிப்புளமா அல்லது அதற்குச் சமமான தகுதி அல்லது
- க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று விஞ்ஞானப் பாடங்களில் சித்தி அல்லது
- 2 வருட தொழிற்பயிற்சி ( தேசிய தொழிற்பயிற்சி சபை அங்கீகாரம்)

எலெக்ரோ தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்களாக விரும்பும் முன்னாள்
வானொலி உத்தியோகஸ்தர்களும் (R.O.) தம்மை இந்த நிகழ்ச்சித்
திட்டத்தில் இணைத்துக் கொள்ளலாம்
அவர்கள் (ETO) சான்றிதழைப் பெற இது உதவும்.

**இது தொடர்பான இலவசக் கருத்தரங்கு**
**26 யூன் 2002 புதன்கிழமை**
**மு.ப. 11.00 மணிக்கு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்**

மேலதிக விபரங்களுக்கு
நிர்வாக அதிகாரி (தொழில்நுட்பம்)
கொழும்பு சர்வதேச நோடிகல் அன்ட் என்ஜினியரிங் கல்லூரி.
காக்கை தீவு, மட்டக்குளி, கொழும்பு 15.
தொலைபேசி : 00+94(01)- 527686
தொலைமடல்: 00+94(01)- 521749
மின்னஞ்சல்: hari@cinec.edu இணையம். www.cinec.edu

Sri Lanka National Quality Award

## மேற்பார்வையாளராகவும் ஓதுவாராகவும் இருக்க ஒருவர் தேவை

**யாழ்ப்பாணம் செந்தில் கதிர்வேலாயுதசுவாமி திருக்கோயில்**

எமது ஆலயத்துக்கு மேற்பார்வையாளராகவும் தேவாரம் பாடக்கூடிய ஓதுவாராகவும் தங்கியிருந்து பொறுப்பாகக் கடமையாற்றக்கூடிய ஒருவர் தேவை.

வருபவர் குடும்பப் பொறுப்புகள் இல்லாதவராக இருப்பது நல்லது.

*உடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:*
அறங்காவலர் திரு.சி.தியாகராசா,
205, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/22481)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வி தனுயா சுந்தரலிங்கம்

*(பழைய மாணவி, மானிப்பாய் மகளிர் கல்லூரி)*

எமது கல்லூரியின் பழைய மாணவியும் எமது கல்லூரி இசையாசிரியை **திருமதி த.சுந்தரலிங்கம்** அவர்களின் அன்பு மகளுமான **செல்வி தனுயா சுந்தரலிங்கம்** அவர்களின் திடீர் மறைவினால் துயருறுகின்ற அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய். (4778) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது அணிவீராங்கனை செல்வி சூ.சுகுனா
அவர்களின் அன்புத் தந்தையார்

## தம்பிப்பிள்ளை சூடாமணி

அவர்கள் காலமானதையிட்டு, அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்து அனுதாபங்களைத் தெரிவித்து அமரரை அஞ்சலிக்கிறோம்.

*யாழ்.பல்கலைக்கழகம்* (4771) - வலைப்பந்தாட்ட அணி.

# பாதுகாப்பமைச்சுச் செயலருடன் கொழும்பில் புலிகளின் சர்வதேசப் பிரமுகர்கள் சந்திப்பா?

## வெறும் புரளி என்கின்றன லண்டன் வட்டாரங்கள்

கொழும்பு,ஜூன்12

விடுதலைப் புலிகளின் சர்வதேசப பிரமுகர்கள் சிலர் அண்மையில் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினர் என்று வெளியான செய்திகளை விடுதலைப் புலிகளின் லண்டன் வட்டாரங்கள் அடியோடு மறுத்துள்ளன. அவை வெறும் புரளி என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ மூவருடன் தனது வீட்டில் பேசியது மட்டும் உண்மை. அவர்கள் வெளிநாடுகளில உள்ள புலி உறுப்பினர்களோ, உளநாட்டு புலி உறுப்பினர்களோ அல்லா. பேசப்பட்டது அரசியலும் அல்ல என்று லண்டன் வட்டாரங்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தன.

ஒஸ்டின் பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேசிய முக்கியஸ்தர் டாக்டர் மகேஸ்வரன் ஆவார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் சர்வதேசத் தலைவர் அவர். ஆஸ்திரேலிய நாட்டில் வாழ்ந்து வருபவர்.

லண்டன் சென்றுவிட்டு அங்கிருந்து கொழும்பு வந்தார். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இலங்கை அபிவிருத்தி மன்றக் கூட்டம் கொழும்பில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் பங்குபற்றவே டாக்டர் மகேஸ்வரன் இங்கு வந்திருந்தார். கூட்டத்தில் டாக்டர் மகேஸ்வரனைக் கண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, டாக்டர் மகேஸ்வரனை தனது வீட்டுக்கு அழைத்தார்.

அவருடைய அழைப்பின் பேரில் தனது நண்பர்கள் இருவருடன் ஒஸ்டின் பெர்னாண்டோவின் வீட்டுக்கு டாக்டர் மகேஸ்வரன் சென்றார்.

அங்கே அவர்கள் கலந்து பேசியது அரசியல் அல்ல, புனர்வாழ்வு உதவிகள் பற்றித்தான்.

நடந்தவை இவைதான். ஏதோ வெளிநாடுகளிலிருந்து புலிப் பிரமுகர்கள் வந்து பாதுகாப்பு அமைச்சு செயலாளருடன் சூடான அரசியல் பேசினார்கள் என்று, விடயம் பூதாகரமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இது ஒருவர் தன்னுடைய நிலையையுயர்த்திக் காட்டுவதற்கு மேற்கொள்ளும் முயற்சியே தவிர (Image building exercise) இது வேறொன்றுமில்லை. புலிகளுக்கும் நடந்த பேச்சுக்கும் எதுவித தொடர்புமில்லை என்று லண்டன் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ம)

# நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை

# நாம் பலமாக இருப்பது அவசியம்!

## மட்டக்களப்பில் நடந்த நிகழ்வில் கேணல் கருணா தெரிவிப்பு!

மட்டக்களப்பு,ஜூன்12

**நாம் ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதா அல்லது சமாதான வழியில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது இலங்கை அரசுதான். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும்வரை நாம் பலமான நிலையில் இருக்கவேண்டியது அவசியமாகும்.**

**- இவ்வாறு விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா தெரிவித்தார்.**

பழுகாமம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் 52ஆவது பயிற்சிப் பாசறையின் நிறைவு விழாவில் பயிற்சியை முடித்துக்கொண்ட போராளிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

6மாத கால பயிற்சியை முடித்துக்கொண்ட 436 போராளிகளின் விளையாட்டுப்போட்டிகளும், அணிவகுப்பு நிகழ்ச்சிகளும் பழுகாமம் மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றன.

கேணல் கருணா தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு காரணம் ஒழுக்கமும், தியாக உணர்வும்தான். சிறந்த ஒழுக்கம் மிக்கவர்களாக ஒவ்வொரு போராளியையும் உருவாக்க வேண்டும் என்பதே எமது தேசியத் தலைவரின் இலட்சியமாகும்.

இன்று எமது தலைவரும், ஸ்ரீலங்காப் பிரதமரும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கை நூறு நாள்களை கடந்த நிலையில் அமைதிச் சூழல் ஒன்று நிலவிவருகிறது. இந்த அமைதிச் சூழலில் ஏன் பயிற்சி என்று நீங்கள் கேட்கலாம். தமிழீழத்தின் காவலர்களாக விளங்கும் எமது பலத்தை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

நாம் மீண்டும் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது ஸ்ரீலங்கா அரசுதான். நாம் புரிந்துணர்வு உடன்படிக்கையை, அதன் மூலம் ஏற்பட்டிருக்கும் அமைதிச் சூழலை மதிக்கிறோம். புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி நாம் செயற்படமாட்டோம். எனவே அரசாங்கம் உரியமுறையில் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்க வேண்டும்.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள் அங்கீகரிக்கப்படும்போது நாம் ஆயுதப்போராட்டத்தை நடத்தவேண்டிய தேவை ஏற்படாது. தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள் கிடைக்கும் வரை நாம் பலமாக இருக்க வேண்டும்.

ஜெயசிகுறு படையணிமீது நாம் நடத்திய தாக்குதல்களிலும், ஆனையிறவுச் சமரிலும் வன்னி மக்கள் போராட்டத்திற்கு வழங்கிய ஒத்துழைப்புக்களே வெற்றிக்குக் காரணமாக அமைந்தன. ஒவ்வொரு பொதுமகனும் போராட்ட களத்திற்கு வந்து போராடினார்கள். இதில் எல்லைப் படையைச் சேர்ந்த 300பேர் வீரச்சாவையும் தழுவிக்கொண்டார்கள்.

இங்கு நாம் வீட்டுக்கொரு போராளியைத் தருமாறுதான் கேட்டோம். படுவான்கரை மக்கள் அதற்கு ஒத்துழைப்புக்களைத் தந்தார்கள். ஒரு சிலர்தான் ஒத்துழைக்காமல் நழுவிக்கொண்டு விஷமத்தனமான பிரசாரங்களைச் செய்தார்கள். நாங்கள் கட்டாய ஆட்சேர்ப்பு செய்வதாக பொய்ப் பிரசாரம் செய்தார்கள். கட்டாய ஆட்சேர்ப்பு செய்திருந்தால் இந்தப் பயிற்சி நிறைவு விழாவை கம்பிவேலிகளுக்குள்தான் நடத்தியிருக்க வேண்டும். திறந்த மைதானத்தில் நடத்தியிருக்க முடியாது.

பயிற்சி பெற்ற போராளிகள் சுதந்திரமாகவே இருப்பதை நீங்கள் அவதானிக்க முடியும். நாம் சலுகைகளுக்காகப் போராடவில்லை. உரிமைகளுக்காகத்தான் போராடுகிறோம். சலுகைகளை உரிமைகள் என சிலர் தவறாக நினைத்துக்கொள்கிறார்கள். எந்தச் சலுகைகளையும் கண்டு நாம் மயங்குபவர்கள் அல்ல.

நாம் எத்தனையோ தரம் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு நகர்விலும் தலைவர் அவதானமாக நடந்துகொண்டதால் எமது இயக்கத்தை எதிரிகளால் வெல்லமுடியாமல் போய் விட்டது.

எமது போராட்டத்தில் 17 ஆயிரத்து 500 போராளிகளையும், லட்சக்கணக்கான பொதுமக்களையும் சொத்துக்களையும் இழந்த நிலையில் உரிமைகளை வெல்ல எழுச்சியுடன் இருக்கவேண்டும் என்றார்.

இவ்வைபவத்தில் சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலன், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மகளிர்பிரிவு இராணுவ சிறப்புத் தளபதி நிலாவினி, தளபதிகளான ரமேஷ், ராபட், தாத்தா, மட்டக்களப்பு - அம்பாறை அரசியல் பொறுப்பாளர் விசு, மகளிர் அரசியல் பிரிவு பொறுப்பாளர் பானுகா உட்பட தளபதிகள், பிரதேச பொறுப்பாளர்கள், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ண பிள்ளை, மாவட்ட அரச திணைக்கள உயரதிகாரிகள் எனப் பெருந் தொகையானோர் கலந்துகொண்டனர்.

போராளிகளுக்கிடையிலான இல்ல விளையாட்டுப்போட்டிகளும் , உடற்பயிற்சி கண்காட்சிகளும் இடம்பெற்றன. போட்டிகளில் வெற்றிபெற்ற போராளிகளுக்கு தளபதி கேணல் கருணா பரிசில்களை வழங்கினார். (ம)

## இந்திய மீனவரை அச்சுறுத்திய பொலீஸ் அதிகாரி விளக்கமறியலில்

இந்திய மீனவர்களை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக பொலீஸ் அதிகாரி உட்பட 7 பேர் மன்னார் நீதிவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பேசாலைக் கடற்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருக்கும் இந்திய மீனவர்களின் மீன்களை அபகரித்ததாகவும் அவர்களை அச்சுறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பாக விசாரணை செய்த பொலீஸார் ஒரு பொதுமகனைக் கைது செய்தனர்.

அவரை விசாரணை செய்த பொலீஸார், பொலீஸ் அதிகாரி ஒருவரின் உதவியுடன் பொதுமக்களில் சிலர் இந்தச் செயல்களில் ஈடுபடுவதாக நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தினர்.

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அந்தப் பொலீஸ் அதிகாரியும் ஆறு பொதுமக்களும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் நீதிவான் எம்.பி.மொஹிடீன் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ம-3)

## தீவகத்துக்குப் புலிகள் செல்வது; சில தினங்களில் முடிவு தெரியும்

கொழும்பு,ஜூன்12

தீவகத்தில் விடுதலைப் புலிகள் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான விவகாரத்துக்கு இறுதி முடிவு அடுத்த சில தினங்களில் எடுக்கப்படும் என்று கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ரியூடர் ரோர்ஹில்சன் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக கடற்படையினருடனும், விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம் என்றும் -

இது விடயம்ாக மாற்று யோசனை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்றும்-

இருதரப்பும் அந்த யோசனைக்கு அங்கீகாரம் தெரிவித்ததும் அந்த முடிவு வெளியாகும் என்றும் -

அவர் மேலும் சொன்னார்.

சகல தீவுகளுக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் -

ஒரு தீவுக்கு மட்டும் சில நிபந்தனைகளுடன் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் - அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் வடக்கில் இருந்து கிழக்கே கடல் ஊடாகச் செல்ல பாதை ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருவதாகவும் ஒரு வாரகாலத்தில் அது தொடர்பாக இறுதி முடிவு எட்டப்படும் என்றும் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## மூதூர் கிழக்கு மக்களிடம் மீண்டும் அடையாள அட்டை பரிசோதனை!

மூதூர் கிழக்கிலிருந்து வரும் பொதுமக்களிடம் நீண்ட காலத்தின் பின் அடையாள அட்டைப் பரிசோதனையை பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

திருமலை மாவட்டத்தின் கட்டைபறிச்சான் சோதனைச்சாவடிப் பொலீஸாரே சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சோதனைச்சாவடியில் வைத்து அவர்கள் இளைஞரிடம் கேள்விகளைக் கேட்டுத் தொந்தரவுபடுத்தி வருவதுடன் அ.அட்டை இல்லாத இளைஞர்களைத் திருப்பி அனுப்புகின்றனர்.

இதற்கிடையே, ஈச்சிலம்பற்றுப் பகுதியில் முட்கம்பிகளைக் கொண்டு செல்வதற்கு மஹிந்தபுர இராணுவச் சாவடி இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். இதற்கான அனுமதியை அரசாங்க அதிபர்களிடம் பெற்றுவருமாறும் அவர்கள் கோரியுள்ளனர் என்று மக்கள் கூறுகின்றனர். (ம)

**வவுனியாவில் நேற்றுமுன்தினம் சம்பவம்:**

## நாகதம்பிரானை தரிசிக்கத் தடை; பக்தர்கள் ஆவேசத் தாண்டவம்

### வீதியில் தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்தினர்

வவுனியா,ஜூன்12

புதூர் நாகதம்பிரான் ஆலயத்தில் நேற்றுமுன்தினமிரவு நடந்த பொங்கல் விழாவில் பங்குகொள்ள முடியாதுபோன ஐந்நூறுக்கு மேற்பட்ட பக்தர்கள் நேர்த்திக்காக எடுத்துச் சென்ற தேங்காய்களை நடு வீதியில் அடித்து, கற்பூரத்தைக் கொளுத்தித் தமது ஆவேசத்தை வெளிக்காட்டிய சம்பவம் நேற்று முன்தினம் மாலை செஞ்சிலுவை சர்வதேசக்குழு வவுனியா அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தப் பொங்கல் விழாவில் பங்குபற்றுவதற்காக 15 வாகனங்களில் இவர்கள் விளக்குவைத்த குளத்தில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைக்கு நேற்றுமுன்தினம் மாலை சென்றனர்.

ஆனால், கண்டி வீதியூடான போக்குவரத்து நிறுத்தப்பட்டதாக படையினர் அறிவித்ததை அடுத்து அவர்கள் விடுதலைப் புலிகளின் அலுவலகத்துக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்துக்கும் சென்றனர்.

விடுதலைப் புலிகளும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் பாதையைத் திறந்து இவர்களை அனுமதிக்க சம்மதித்ததாகவும் -

முன் அனுமதி பெறவில்லை என்று காரணம் காட்டி படையினர் பாதையைத் திறக்கமறுத்தனர் என்றும் - கூறப்பட்டது.

இதையடுத்து பக்தர்கள் அங்கு செஞ்சிலுவை அலுவலகம் முன் வீதியில் தேங்காய்களை உடைத்து கறபூரத்தைக கொளுத்தி தமது ஆவேசத்தைக் காட்டிய பின்னர் கலைந்து சென்றனர். (ம-3)

# அரசின் அசமந்தப் போக்கே போராட்டங்களுக்கு காரணம்!

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் பகிஷ்கரிப்புக்களும் போராட்டங்களும் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன. சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு எதிராக தமிழ்மக்கள் ஏகோபித்த குரலில் ஒன்றுசேர்ந்து உலகத்தைத் தங்கள் பக்கம் திருப்ப நடத்தும் ஆயுதம் ஏந்தாப் போராட்டங்களே இவை. மாணவரின் போராட்டம், ஆசிரியரின் பகிஷ்கரிப்பு, மீனவரின் மறியல் என்று பல்வேறு பரிணாமங்களில் தமிழ் சக்திகள் தமது எண்ணங்களை வெளிப்படுத்துகின்றன.

## அரசியல்வாதிகளை நம்பி மோசம்போனது போதும்

தமிழர் தாயகத்தில் பேரினவாதம் என்று கட்டவிழ்த்து விடப்பட்டதோ, அன்றிலிருந்து இப்போராட்டங்கள் தொடர்கதையாகவே உள்ளன.

பள்ளிச் சீருடையில் சிதைக்கப்பட்ட மாணவி கிருஷாந்தி, மட்டக்களப்பில் மடிந்துபோன கோணேஸ்வரி, துப்பாக்கிமுனையில் சிதைக்கப்பட்ட சஞ்சீவன், பேனாமுனையில் தமிழர் துயர்தனை உலகத்திற்குப் பறைசாற்றியதன் விளைவாக ஓர் இரவில் உயிர்நீத்த பத்திரிகையாளன் நிமலராஜன் இவர்கள் செய்த தவறு என்ன? இத்தகைய கேள்விகளே மக்கள் போராட்டமாய் பரிணமித்தன.

இன்று பல பரிமாணங்களில், பல கோணங்களில் வடிவெடுத்திருக்கும் இப்போராட்டங்கள் காலிமுகத்திடலில் தமிழ்த்தலைவர்கள் அன்று நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டங்களுக்கு நிகரானவையே.

அன்று அடக்குமுறையால் சாத்வீகப் போராட்டங்கள் அடக்கப்பட்டதாலேயே இன்று நாடு குற்றுயிராய்க் கிடக்க நேரிட்டுள்ளது. இந்த அனுபவ பாடத்தை. அடுத்தடுத்து வந்த இலங்கை அரசுகள் தெளிவாகப் புரிந்திருக்கின்றன போலும். அதனால் தானோ என்னவோ இப்போதெல்லாம் தமிழர்களின் சாத்வீகப் போராட்டங்களைத் தமது அடிவருடிகள் மூலம் பசப்பு வார்த்தைகள் கூறி மழுங்கடிக்கவே அரசுத் தரப்பு ஆவன செய்கிறது. ஆயினும் வாக்குப் பொறுக்கிகளின் வாக்குறுதிகளுக்கு மயங்கிடாது உரிமையுடன் வாழ்வதற்காய் உரத்துக்குரல் கொடுக்கும் போராட்டங்களும் நடந்துகொண்டுதான் உள்ளன.

### மீனவர் போராட்டம்

புரிந்துணர்வு உடன்படிக்கையில் மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில் புரிய இடமளிப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தபோதும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 90 நாள்கள் கடந்த நிலையிலும் இவை செயற்படுத்தப்படவில்லை. இதற்கு அரசின் அசமந்தப்போக்கே காரணம்.

ஆனால் தமிழர்தம் உணர்ச்சி வெளிப்பாடுகளை அரசு உணரவில்லை. அந்த உணர்ச்சி வெளிப்பாடு போராட்டமாக வெடித்திருக்கிறது.

### மாணவர் பகிஷ்கரிப்பு

எம் கல்வியை தாமே தீர்மானிக்க வேண்டும் என்ற கோஷத்துடன் தமிழர் தம் அழியாச் சொத்தாகிய கல்வியைக் காக்க பாடசாலைகளில் தங்கியுள்ள படையினர் வெளியேற்றப்படவேண்டும், இயல்பான கல்விச் செயற்பாடுகளுக்கு உள்ள இடையூறுகளை அகற்றுதல் ஆகிய கோரிக்கைகளுடன், பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர் மாணவர்கள்.

### ஹர்த்தால்

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்களை செயற்படுத்துமாறு வலியுறுத்தி வருகிறது. உடன்படிக்கையை அமுல்படுத்தி 90 நாள்கள் முடிவடைந்த நிலையிலும் உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் செயற்படுத்தப்படாமையினாலேயே மக்கள் இன்று போராட்டத்தில் குதித்துள்ளனர். இந்தப் போராட்டம் சாதகமான முடிவை ஏற்படுத்துவது மக்களின் ஒருமித்த செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது.

இதேசமயம், தமிழர் பிரதேசங்களில் பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் தொடரத்தான் போகின்றனவா? என்பதற்குத் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றிருப்போரும், வாக்குறுதிகளை சிதற விட்டு விட்டு நிறைவேற்றாது திரியும் அரசியல்வாதிகளுமே பதில் கூறவேண்டும்.

**து.ஐங்கரன்**

அதைவிட்டு, முன்னர் குற்றம் என்று கூறியவற்றை இன்று பதவி கிடைத்தவுடன் தாம் செய்துகொண்டு, 'உரிமைக்காய்ப் போராடும் வாளாக இருப்போம்' என்று உரத்துக்கூறிவிட்டு, 'நிமிர்த்த முடியாத நாய் வாலாக' மாறிவிடும் அரசியல்வாதிகள் தமது கடமைகளைச் சரியாகச் செய்யும்வரை மக்கள் போராட்டங்கள் தவிர்க்கமுடியாதவை மட்டுமல்ல, தவிர்க்கக்கூடாதவையுமாகும்.

# 'சிலிடா' நிறுவன பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை

## பலதரப்பினருடனும் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்ப்பாணத்துக்கான வெளிக்கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு 'சிலிடா' (Silida) நிறுவனத்தின் பிரதிநிதிகள குழு ஒன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இங்கு வருகைதந்துள்ளது.

அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்குப் பல வகையான பயிற்சிகளை வழங்கி வருகின்ற 'சிலிடா' நிறுவனம் இங்கும் தனது செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பாகப் பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது.

- இவ்வாறு அந்த நிறுவனத்தின் பயிற்சிநெறி பணிப்பாளரும் ஒருங்கிணைப்பாளரும் ஆன ஐவன் திரேசா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வருகை தந்த இக்குழுவினர் தெல்லிப்பழை, கோப்பாய், உடுவில் ஆகிய பிரதேச செயலகங்கள் மற்றும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், யாழ்மாநகர சபை ஆகியவற்றுக்குச் சென்று அங்குள்ள உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதுடன் நேற்றுப் பகல் 12 மணியளவில் யாழ்.கல்வி வலயத்தின் மாநாட்டு மண்டபத்தில் குடாநாட்டில் உள்ள அரச திணைக்களங்கள், பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றின் கணக்காளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினர். இதில் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும் கலந்துகொண்டார்.

வருகை தந்த குழுவில் இடம் பெற்றுள்ள 20 பேரின் பெயர், விவரங்கள் வருமாறு:-

ஐவன் திரேசா (பயிற்சி நெறிப் பணிப்பாளரும் ஒருங்கிணைப்பாளரும்), தம்மிக்க குணவர்த்தன (சிரேஷ்ட ஆலோசகர்), டபிள்யூ.எல்.நவரத்ன, எம்சோமதிலக, டபிள்யூஹலகிட்டியவ, எஸ்கே.குசல குமாரன், கே.ஏ.ஆனந்த, எம்பிடிபிபத்திரன, ஈ.ஜி.எஸ்மெனிக்கே, எம்.எஸ்.நயனகுமார -

பி.ஜி.பி.எஸ்.ஜயசிங்க, ஏ.கே.டி.எல் சனிக்க அமரதாஸ், கே.கமலேஸ்வரன், என்.குலசேகர, ஏ.பி.கொடிகார, ஏ.ஜி. சோமலதா, எஸ்.டபிள்யூ.வடநம்பி, ஆர்.ரி.எஸ்.எல்.ஜயசிங்க, ஏ.பி.ஹிக்கொட, பி.ரி.ஜி.குணதிலக.

(ம-10-8)


**யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை**

**166ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்தப் பரிசளிப்பும்**

**காராளசிங்கம் ஞாபகார்த்தக் கட்டடத் திறப்பு விழாவும்**

☆ *காலம்* - 14.06.2002 (வெள்ளிக்கிழமை) மு.ப.9.30 மணி.
☆ *இடம்* - கல்லூரி வளாகம்
☆ *தலைவர்* - திரு.அ.மு.அருணாசலம் அதிபர்
☆ *விசேட அதிதி* - உயர் திரு.இந்திரன் காராளசிங்கம் அவர்கள்
☆ *முதன்மை விருந்தினர்* - திரு.வீ.இராசையா அவர்கள் (வ.க.ப.வலிகாமம்)
☆ *சிறப்பு விருந்தினர்கள்* - திருமதி ஜெ.இருதயநாதன் (வ.க.ப.வலிகாமம்)
- திரு.க.தனபாலசிங்கம் (கோ.க.பணிப்பாளர்)
- திரு.ஜி.சிவபாலன் (பொறியியலாளர்)
☆ *கௌரவ விருந்தினர்* - திரு.எஸ்.சண்முகநாதன் (பொறியியலாளர்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர்,
பாடசாலைக் குடும்பம் சார்பாக.

(4782)


# கிளிநொச்சியில் காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு நீதி கிட்டுமா?

மரணங்கள் மலிந்து கிடந்த இலங்கையில் துளிர்விட்டுள்ள சமாதானம் தமிழர்களின் மனக் காயங்களுக்கு மருந்திட்டிருப்பது உண்மைதான். ஆனாலும் அராஜக ஈட்டியால் குத்திக் கிழிக்கப்பட்டு ஆறாத ரணங்களால் முனகும் உள்ளங்களும் நம்மிடையே இல்லாமல் இல்லை.

## 184 எலும்புக்கூடுகளும் அடையாளம் காணப்படுமா?

அப்படி ஒன்று இரண்டு அல்ல நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சோகங்களை மௌனத்துக்குள் புதைத்துவிட்டுத் துயரங்களுடன் வாழ்ந்துவருகின்றன.

யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கிச் சின்னாபின்னமாகி, புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் சிறிது சிறிதாக மெருகேறிவரும் கிளிநொசசி நகரில் வாழ்கின்றன இந்தக் குடும்பங்கள்.

இவற்றின் வேதனைக்கு வித்திடப்பட்டது 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில். அப்போதுதான் சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் கிளிநொச்சி நகரை இராணுவம் வசப்படுத்தியது. அந்தச் சமயத்தில் 'போட்டது போட்ட படி கிடக்க' உயிரை மட்டும் கையில் பிடித்தபடி கிளிநொச்சி மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினார்கள்.

ஆளரவமற்ற நகரம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்தது. குண்டுச் சத்தங்கள் அடங்கியதும், மக்கள் 'எதுவுமின்றி நிற்கின்றோம் விட்டு வந்த பொருள்கள், கட்டி விட்டு வந்த கால்நடைகள் போன்றவற்றின் கதி என்ன' என்று அறிய அச்சத்துடன் தமது சொந்த இடங்களுக்குப் போனார்கள். போனவர்கள் திரும்பவில்லை. ஒருவர் இருவர் அல்ல 184 பேர் இப்படிக் காணாமற்போனார்கள்.

காலத்தின் ஓட்டத்தில் கிளிநொச்சியில் மீண்டும் நிம்மதிக் காற்றுத் தவழ்ந்தது. காணாமற் போயிருந்தவர்களின் குடும்பங்களும் மற்றவர்களுடன் தம் தாய்மண்ணைத் தொட்டன. மற்றக் குடும்பங்கள் தாம் விட்டுச் சென்றவற்றில் மீதத்தைத் தேட, 184 பேரினதும் உறவுகள் காணாமற்போனவர்களை கண்ணீருடன் தேடினர்.

தேடியவர்களுக்கு கிடைத்தவை எலும்புக்கூடுகளே. மலசலகூடக் குழிகளுக்குள், பாழடைந்த கிணறுகளுக்குள், நீர்ப்பாசன வாய்க்கால்களில் மொத்தம் 69பேரது எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

அவற்றில் 12 அடையாளம் காணப்பட்டன.

இதையெல்லாம் கால ஓட்டம் உலகின் நினைவுகளில் இருந்து நீக்கிவிட்டாலும், காணாமற்போன 184 பேரினதும் குடும்பங்களின் வேதனையை மழுங்கடிக்கும் சக்தி, காலத்துக்கும் கிட்டவில்லை.

இன்று அந்த 184 குடும்பங்களும் வறுமையில் வாடுகின்றன.

தொண்டு நிறுவனங்களின் எந்த விதமான உதவிப் பார்வைகளும் படாத நிலையில் இவற்றின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிட்டது.

இந்த நிலையில் அடையாளம் காணப்படாத எலும்புக்கூடுகள் 'மரபணு' சோதனைக்கு உட்படுத்தப்பட்டுக் காணாமற்போனோர் அடையாளம் காணப்படுவார்களா? அதன் பின்னராவது உதவிகள், நிவாரணங்கள் கிடைக்குமா? இழப்பீடுகள் வழங்கப்படுமா? பாதிக்கப்பட்ட சந்ததியின் வாழ்வு ஒளி பெறுமா? இப்படி பதில் தெரியாத கேள்விகளுடன் அந்தக் குடும்பங்கள் காலத்தைக் கழிக்கின்றன.

கிளிநொச்சியில் மட்டுமல்ல, தமிழ் மண்ணைப் பிடித்துவிட்ட வெற்றிக் களிப்புக்கு பலியாடுகளாக்கப்பட்டு காணாமற்போனோர் பட்டியலில் பெயர்களாய் மட்டும் தென்படுவோரின் உறவுகளுக்கு நீதி கிடைப்பது எப்போது?

*தகவல்:*
**நெடுங்கேணியூரான்**
*தொகுப்பு:*
**பிரகாசன்**



**யாழ்.கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற 'சிலிடா' (Silida) நிறுவனத்தின் ஒன்றுகூடல் நிகழ்வின்போது, யாழ்.மாவட்ட மேலதிக அரசஅதிபர் து.வைத்திலிங்கம் உரையாற்றுவதையும் நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் தம்மிக்க குணவர்த்தன, பயிற்சி இயக்குநரும் இணைப்பாளருமாகிய ஐவன் திசேரா மற்றும் யாழ்.செயலக கணக்காளர் எஸ்.சண்முகரட்ணம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.**

*(படம்:-தேவராஜன்)*

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 - 03 - 1973



மறைவு 10 - 06 - 2002

**அமரர் தனுஜா சுந்தரலிங்கம்**
**(B.Com.,D.I.N. COMPUTER IIS)**

**சிரித்த முகத்துடனே கலகலப்பாகப் பேசுகின்ற உன்னை**
**பொல்லாத காலன் இன்னுயிர் கவர்ந்து சென்றானோ?**
**போதுமிந்த வாழ்க்கையென்று பொன்னுலகம் புகுந்தாயோ?**
**என்று உன் நினைவால் ஏங்கியே தவிக்கின்றோம் நாம்.**

உன் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர், நண்பர்கள்,**
**ஞானக்குழந்தை இல்லம்**
**பாலர் கல்விக் கழகம்.**

(4788)

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை பரமசிவம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர், வட்டுக்கோட்டை)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை பரமசிவம் நேற்று (11.06.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - செல்லம்மாவின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சறோஜினிதேவி (ஆசிரியை, அராலி இந்துக் கல்லூரி), புஸ்பகௌரி, சந்திரவதனி (ஆசிரியை, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆரம்பப்பிரிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரராசா (மனோ) அவர்களின் அன்பு மாமனாரும், வாசவனின் பாசமிகு பேரனும் திருமதி நேசம்மா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-06-2002) புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*


(4785)

தகவல்:
சரஸ்வதி (மனைவி)

# சிங்கர் சந்தைபடுத்தும் தரமுயர்ந்த சாதனங்களை யாழ்ப்பாணத்திலும் வாங்கலாம்.












இதோ, யாழ் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

150 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கிவரும் சிங்கர் நிறுவனத்தினால் வழங்கப்படும் தரமுயர்ந்த வீட்டுப்பாவனை சாதனங்கள் இப்பொழுது உங்கள் காலடிக்கு வந்துள்ளன.






நவீன தொழில்நுட்பத்தின் படைப்புக்களான சிங்கர் தையல் மெஷின்கள், குளிரூட்டிகள், விவசாய நீரிறைக்கும் இயந்திரங்கள், சலவை இயந்திரங்கள், சமையலறை உபகரணங்கள், வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், மின்விசிறிகள், துவிச்சக்கர வண்டிகள் முதலியவற்றை நீங்கள் கீழ்க்காணும் விற்பனை நிலையங்களில் கொள்வனவு செய்யலாம்:



**SINGER HITACHI Whirlpool AKAI**

**SISIL TEFAL Prestige Welling**





## சிறந்த பயனடைய சிங்கரை நாடுங்கள்!

**ஊஷா ஏஜென்சி**
62/32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**சிங்கர்**®
மாசற்ற மேன்மை

(C/22488)

Advantage-DY&R

# நீங்காத நினைவலைகள்

8ஆம் ஆண்டு 2ஆம் ஆண்டு



அமரர்
ஆறுமுகம் கணேசையா



திருமதி
கணேசையா ஆசைப்பிள்ளை

19.05.1922 ← தோற்றம் → 06.05.1923
15.08.1994 ← மறைவு → 04.06.2000

திதி: 12-06-2002 (துதியை)

*எங்கள் அன்புத் தெய்வங்களே! எங்கே நீவிர் மறைந்தீர்களோ? பொங்கும் அன்பு வெள்ளம் வற்றிப் போயிற்றோ? ஆண்டுகள் இரண்டல்ல, எட்டல்ல, ஆயிரந்தான் சென்றாலும் எம்துயரம் எந்நாளும் தீராது வருவீ[illegible] அம்மா! ஐயா!*

*உங்கள் பிரிவால் வாடும்:*
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

*77, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/22480)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 16 - 12 - 1939
விண்ணில் 25 - 05 - 2001

## அமரர்
## வெள்ளையன் கணேசு

திதி: 12.06.2002


ஆருயிர்த் தந்தையே! குடும்பத்தின் தெய்வமே!
அன்பூட்டி அறிவூட்டிய உங்கள் பிரிவால்
நெஞ்சங்கள் நிசப்தமாகி ஆண்டொன்று கழிந்தாலும்
நீங்கா நினைவில் என்றும் - எம்
உள்ளத்தில் நிலைத்திருப்பீர்கள்!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனை வேண்டுகின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

*புதூர் லேன்,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
(4774)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 - 10 - 1925
மறைவு 24 - 05 - 2001

*சமூகப்பிரியன்*
## அமரர் சி.கிருஷ்ணபிள்ளை

திதி: 12.06.2002

இடதுசாரிக் கொள்கையினால் எத்தனையோ
தீர்வுகளை திடமுடனே ஆக்கி சமூகசேவைக்காய்
களைப்பின்றி வாழ்ந்த எங்கள் அப்பையாவே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் எங்கள்
இதயங்களில் குடியிருக்கும் உங்கள் பாசமிகு
நினைவுகள் எம்மைவிட்டு என்றும் நீங்காது
நிலைத்திருக்கும்.....

*உங்கள் பிரிவால் துயருறும்:*
அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*"செந்தாரகை"*
*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*
(C/22474)

# செய்திக் கொத்து

## குளத்தில் ஆகாயத் தாமரை

கொழும்புத்துறை,ஜூன்12

கொட்டடிப் பகுதியிலுள்ள தாமரைக்குளம் ஒன்றில் ஆகாயத் தாமரைகள் படர்ந்து குளத்தை மூடியுள்ளன.

இதனால் நுளம்புப் பெருக்கம் மற்றும் நோய்களின் தாக்கம் என்பவை குறித்து மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (ம-13-ரி)

## கழிவு அகற்றும் குழாய் திருத்தம்

கொழும்புத்துறை,ஜூன்12

யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் வெளியேறும் நிலத்தடிக் குழாய்கள் வைத்தியசாலையிலிருந்து பண்ணைக் கடல் பகுதிவரை புதிதாகப் பொருத்தப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த குழாய்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு கழிவுகள் வெளியே கசிந்ததால் நகரப் பகுதியில் சுகாதார அசௌகரியங்கள் நிலவியமை குறிப்பிடத்தக்கது. (ம-13-ரி)

## கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்.கல்வித் திணைக்களத்தின் முறைசாரக் கல்விப் பிரிவினரால் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்படும் கணனிப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மற்றும் பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்கள் இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம் எனக் கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார். (ம-13-ரி)

## குருப்பட்டம் வழங்கல்

கொழும்புத்துறை,ஜூன்12

யாழ்.மறைமாவட்டத்தைச் சேர்ந்த 3அருட்சகோதரர்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். பேராலயத்தில் நடைபெறவுள்ள குருத்துவ அபிஷேக விழாவில் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். (ம-13-ரி)

## உணவு முத்திரை வழங்கல்!

யாழ்ப்பாணம்,ஜூன்12

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் உலர் உணவு பெறத் தகுதியானோருக்கான முத்திரைகள் அவ்வப் பகுதி கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் உலர் உணவு முத்திரை வழங்கப்படும் இறுதித்தினம் நாளையாகும் என்றும், முத்திரையைப் பெற்று உடனடியாக உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ம-13)

## மணல் ஏற்ற அனுமதி

செம்பியன்பற்று,ஜூன்12

வடமராட்சி கிழக்கு மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் மணல் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-13-ரி)

## ஆசிரியர்களுக்கு அழைப்பு

செம்பியன்பற்று,ஜூன்12

மருதங்கேணி பிரதேசத்தில் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ள நான்கு பாடசாலைகளில் இடம்பெயர்வு காலத்திற்கு முன் பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவரையும் மீண்டும் தத்தமது பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்கும்படி வடமராட்சி கல்வி வலயம் அறிவித்துள்ளது.

மேற்குறித்த பிரதேசத்தில் இயங்குகின்ற 4பாடசாலைகளின் விவரம் ஏலவே வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-13-ரி)

## சாவகச்சேரியில் மீண்டும் பிரிகேட் அலுவலகம்

தென்மராட்சி,ஜூன்12

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மீண்டும் படையணி (Brigade office) அலுவலகம் நேற்றுமுன்தினம் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 1996ஆம் ஆண்டு மே மாதம் சாவகச்சேரி நகரில் அமைக்கப்பட்டு இயங்கிவந்த இந்த அலுவலகம் 2000 மே மாதம் இடம்பெற்ற யுத்தத்தின்போது அங்கிருந்து வெளியேறி தற்போது மீண்டும் அதே இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

சாவகச்சேரி தபால் நிலையத்திற்கு அருகில் உள்ள 5 வீடுகளை இந்த அலுவலகத்திற்காகப் படையினர் எடுத்துள்ளனர். (ம-117)

உ
சிவமயம்

**கரவெட்டி தச்சந்தோப்பு**
## சிந்தாமணி விநாயகர் ஆலய
# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

*காலம்:* **நாளை (13.06.2002) வியாழக்கிழமை**
**மு.ப. 9.30 மணி - நண்பகல் 12.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளை.**

*சித்திரத்தேர் வடிவமைப்பு:*
**கலாபூஷணம் சு.இராசரத்தினம் அவர்களும்**
**திருநெல்வேலி விநாயகர் சிற்பாலயக் குழுவினரும்.**

*நாதஸ்வர கானம்:* **நாதஸ்வரகான கலாநிதி கலாசூர**
**N.K.பத்மநாதன் குழுவினர்.**

*அனைவரையும் விநாயகப் பெருமான் அருள்பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

ஆலய பரிபாலன சபையினர்
(சி-22478) - கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம்.

உ
# சிறப்புக் கௌரவிப்பு



இணுவில் சிவன் ஆலயத்தில்
வைகாசி அமாவாசை அலங்கார
உற்சவத்தை வெகு சிறப்பாக
நடத்திய பிரதமகுரு

## தானு.வாசுதேவக் குருக்கள்

அவர்களுக்கு தேர் உற்சவ உபயகாரர் திரு.கு.முருகையா அவர்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவித்து உபயகாரர்கள் மலர் மாலை அணிவித்துச் சிறப்பித்தனர். சிவன் அடியார்களுக்கு அருளாசியும் வழங்கினார்கள்.

குரு வாழ்க.

தர்மகர்த்தா
(4768) உபயகாரர்கள், இணுவை அடியார்கள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ஜெ.ஜெயச்சந்திரன்
அவர்கள் அன்பு மாமியார்

## திருமதி சதாசிவம் சிவபாக்கியம்

அவர்களின் மறைவினால் துன்புற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
*யாழ்ப்பாணம்.* (4769) யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

# இதய அஞ்சலி



## சின்னப்பொடியன் சிறில்

எம்மை வாழவைத்த அன்புத் தெய்வத்தின் ஆன்மா
சாந்தியடை எமது இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம். (4770)

*23, முதலாம் குறுக்குத் தெரு,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*
- *மனைவி:* ஜெயம், பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## சின்னப்பொடிய்ன் சிறில்

யாழ்ப்பாணம், குருநகர், இல.23, முதலாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் சிறில் 04.06.2002 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சவிரிமுத்து சின்னப்பொடியன் - அன்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செபமாலை செல்லத்துரை - திரேசம்மா தம்பதிகளின் மகளாகிய ஜெயம் அவர்களின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2002) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்படும். அங்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23, முதலாம் குறுக்குத் தெரு,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.*
(சி-22476)

தகவல்:
சிறில் ஜெயம்
(மனைவி)

# ஹர்த்தாலுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு பல்கலை மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்12

இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கை வருமாறு:-

தமிழினத்தின் வரலாறு ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ள இந்நிலையில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுக்கும் ஸ்ரீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தமானது இலங்கைத்தீவில் ஒரு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தும். கடந்த பல தசாப்தங்களாக அடக்கப்பட்டு வரும் தமிழினத்திற்கு அவர்களின் வடக்கு - கிழக்குத் தாயகத்தில் ஒரு நிம்மதியான வாழ்வை அளிக்கும் என சமாதான விரும்பிகளால் எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் தமது இனத்தின் விடுதலை சமாதான வழியில் கிடைக்குமாயின் அதனை ஏற்க விடுதலைப் புலிகளும் இதய சுத்தியுடன் முன்வந்திருக்கின்றனர்.

ஒரு நிரந்தரமான சமாதானத்தை - நிரந்தரமான தீர்வை - சமாதான வழியில் பெற்றுக்கொள்ளும் வழிமுறையின் ஆரம்ப கட்டமாகவே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், நிரந்தர சமாதானத்திற்கான அந்த ஆரம்ப விடயங்களையே அரசாங்கம் அமுல்படுத்தப் பின்நிற்பதானது இந்த ஒப்பந்தமானது கடந்த காலங்களைப் போன்று ஸ்ரீலங்கா அரசின் கபட நாடகங்களில இறுதியானதா என எண்ண வைக்கிறது. ஏனெனில் இந்த ஒப்பந்தம் இரு சாராரினதும் முழுமையான பரிசீலனைக்குப் பின்பே கைச்சாத்திடப்பட்டதாக இருக்கின்றபோதிலும், அதில் உள்ள விடயங்களை அனுசரித்து நடக்க ஸ்ரீலங்கா அரசதரப்பு பின்னிற்பதானது அதன் உதாசீனப் போக்கையே காட்டுகிறது.

எனவே ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் முழுமையான முறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுல் செய்யப்படாமையை எதிர்த்தும் நிரந்தர சமாதானத்தைப் பாதிக்கும் ஏனைய அனைத்து செயற்பாடுகளை எதிர்த்தும யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள குடாநாடு தழுவிய ஹர்த்தால் முழுமையாக வெற்றியடைய எமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதுடன் எமது மக்கள் அனைவரையும் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# சமாதான முயற்சிகளை சீர்குலைக்க மாட்டோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,ஜூன்12

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சீர்குலைக்கப் போவதில்லை.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ராமன்னிய நிக்காயாவில் மகாநாயக்கரை நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சந்தித்து உரையாடிய போதே இதனைத் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளில் சந்தேகத்துக்குரிய விடயங்கள் தெளிவாக்கப்படவேண்டும் - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கட்சி பேதங்களை மறந்து சகலரும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தரவேண்டும் என்று தேரர் அநுசாசனம் வழங்கும்போது குறிப்பிட்டார்.

தாயகக்கோட்பாட்டை நாங்கள் ஆதரிக்கவில்லை. சாதாரண தமிழ் மக்கள் இதனைக் கேட்கவில்லை. அரசியல்வாதிகள்தான் பல உறுதிப்பாடுகளை வழங்கி வருகின்றனர் எனவும் தேரர் தெரிவித்தார்.

(ஐ-6)

# மேலும் பல அமைப்புகள் ஹர்த்தாலுக்கு ஆதரவு!

யாழ்ப்பாணம்,ஜூன்12

இன்று குடாநாடெங்கும் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டத்திற்கு பல்வேறு அமைப்புக்களும் ஆதரவு .தெரிவித்துள்ளன.

### தொழில்நுட்பக் கல்லூரி

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத்தின் விடுத்துள்ள அறிக்கையில் -

மக்களின் இயல்பு வாழ்க்கையை வலியுறுத்தி இன்று அனுஷ்டிக்கப்படும் ஹர்த்தாலுக்கு எமது பூரண ஆதரவை வழங்குகிறோம். அத்துடன அவசர தேவை தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் அரச, தனியார் வாகனங்களை போக்குவரத்துக்காக பயன்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் தொலைத் தொடர்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் உட்பட அனைத்து வியாபார நிலையங்களையும் மூடி ஒத்துழைக்குமாறும் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### மகளிர் அமைப்பு

மகளிர் அபிவிருத்தி நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் -

மக்களின் இயல்பு வாழ்க்கை சீராக அமைவதை வலியுறுத்தும் சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டியது அவசியத் தேவையாகும் அந்த வகையில் இன்று நடைபெறும் ஹர்த்தால் போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவை தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று உள்ளது.

### ஓட்டோ சங்கம்

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவை சங்கத்தினர் தமது அறிக்கையில், இன்று நடைபெறும் போராட்டத்திற்கு பூரண ஒத்துழைப்புத் வழங்குவதுடன். ஓட் டோக்களை சேவையிலீடுபடுத்தாது ஒத்துழைக்குமாறு உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளைக் கேட்டுள்ளனர்.

(மேலும் செய்திகள் 5ஆம் பக்கத்தில்) (ஐ-9)

## தெற்காசிய எழுத்தாளர் மகாநாடு

யாழ்ப்பாணம்,ஜூன்12

ஆக்க இலக்கியம் மற்றும் ஆய்வுகள் பற்றிய தெற்காசிய நாடுகளின் மாநாடொன்று எதிர்வரும் 26ஆம், 30ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

பிரிட்டிஷ் கவுன்ஸில் மற்றும் இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாடு ஆங்கில மொழியில் இடம்பெறும்.

கவிஞர் தம்பிமுத்து, நாடகாசிரியர் மக்கின்ரயர், எழுத்தாளர் சாந்தன் போன்றோரின் ஆக்கங்கள் பற்றிய ஆய்வுகள் மற்றும் தொண்ணூறுகளில் கொழும்பை நோக்கிய தமிழர்களின் உள்நாட்டு இடப்பெயர்வு போன்ற பல ஆய்வுகள் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

(ஐ)

# பனை அழிப்பைக் கண்டித்து வெள்ளியன்று நகரில் பேரணி!

யாழ்ப்பாணம்,ஜூன்12

குடாநாட்டில் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பனை அழிப்பு நடவடிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பனை அபிவிருத்திச்சபை மற்றும் யாழ். பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என்பவற்றின் ஏற்பாட்டிலேயே இப்பேரணி நடத்தப்படவுள்ளது.

அன்று காலை 10 மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலில் இருந்து பேரணி ஆரம்பமாகி கோவில் வீதி, வைத்தியசாலை வீதி, கண்டி வீதி ஊடாக யாழ். செயலகத்தை சென்றடையும். அங்கே அரச அதிபரிடம் மகஜர் சமர்ப்பிக்கப்படும்.

தமிழினத்தின் ஜீவனோபாய வளங்களில் ஒன்றான பனை வளத்தின் அழிப்பானது பொருளாதாரத்தை சீர்குலைக்கும். அதுமட்டுமின்றி 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மககள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயனைப்பெற்று வருகின்றார்கள். இத்தகைய வளமானது படையினராலும் பிறரினாலும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. இவற்றைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படுகிறது.

(ஐ-13)

# அரேபியக் கடலில் தத்தளித்த இலங்கையர்

பாரிஸ்,ஜூன12

அரேபியக் கடலில் தத்தளித்த 150 இலங்கையரை பிரெஞ்சு கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

யேமன் நாட்டுக்கு சட்டவிரோதமாகச் செல்லமுயன்றவேளை கப்பல் இயந்திரக் கோளாறு காரணமாக நடுக்கடலில் நங்கூரமிடப்பட்ட நிலையில் இருந்ததாக பிரெஞ்சு கடற்படை தெரிவித்துள்ளது.

'எஸ்.டி.எஸ்' என்ற இந்தக் கப்பல் கடந்த மாதம் இலங்கையில் இருந்து புறப்பட்டுள்ளது.

இதேவேளை -

கப்பலின் கப்டனும் மாலுமிகளும் சிறு படகுகளில் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

(ஐ)

# 'சார்க்' போட்டித் தெரிவுக்கு யாழ். வீரர்கள் கொழும்புக்கு!

வலி.வடக்கு,ஜூன்12

'சார்க்' நாடுகளுக்கிடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வீர வீராங்கனைகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான போட்டிகளில் கலந்துகொள்வதற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 13 பேர் நாளை கொழும்பு செல்லவுள்ளனர்.

கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற முதலாம் சுற்றுத் தெரிவைத் தொடர்ந்து நடைபெறவுள்ள 2ஆம் சுற்றுத் தெரிவுக்கே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

வீர வீராங்கனைகளைத் தெரிவு செய்யும் விளையாட்டுப் போட்டிகள் கொழும்பிலுள்ள விளையாட்டு அமைச்சு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இபபோட்டிகளில் கலந்துகொள்ளச் செல்லும் வீர வீராங்கனைகளுடன் யாழ் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரும் பயிற்றுநருமான செ.ரமணன் செல்லவுள்ளார்.

(ஐ-13-86)

## 'லேக் ஹவுஸ்' அலுவலகக்கிளை திறக்கப்படும்

கொழும்பு,ஜூன்12

அசோசியேட் நியூஸ் பேப்பர்ஸ் (லேக்ஹவுஸ்) நிறுவனத்தின் யாழ். மாவட்டக் கிளை அலுவலகமும், 'தினகரன்' புத்தக நிலையமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளன.

ஸ்ரான்லி வீதியில் உள்ள மகாலட்சுமி கட்டடத்தின் முதல் மாடியில் இந்தக் கிளை அலுவலகம் மற்றும் புத்தக நிலையத்தை ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் திறந்து வைக்க உள்ளார்.

(ஐ-ஒ)

# புத்தூர், வேம்பிராய் வீதிகள் மீண்டும் போக்குவரத்துக்கு!

தென்மராட்சி,ஜூன்12

கடந்த இரண்டு வருடங்களாக பொதுமக்களின் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த மீசாலை புத்தூர்ச் சந்தி - கனகன்புளியடி சந்தி வீதி, வரணி - வேம்பிராய் வீதி ஆகியவை நேற்று பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளன.

மந்துவில் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஆட்லறி ஷெல்தளத்திற்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு இவ்வீதிகள் முன்னர் மூடப்பட்டிருந்தன.

அண்மையில் ஆட்லறி ஷெல் தளம் வரணி இடைக்குறிச்சிப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து இப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த முகாம்களிலிருந்து படையினர் வாபஸ் பெற்ற பின்னர் வீதிகள் திறந்து விடப்பட்டுள்ளன.

(ஐ-117)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய பாலஸ்தான கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 8.15 மணிக்கு நடைபெறுவுள்ளது.

முன்னதாக இன்று மாலை 3 மணிக்கு கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகஉள்ளன.

(ஐ-9)

# புலிகளின் அலுவலகம் கல்முனையில் திறப்பு!

காரைதீவு,ஜூன்12

கல்முனையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின கிழக்கு மாகாண சிறப்பு அரசியல் பொறுப்பாளர் எஸ்.கரிகாலன், திருமதி எழில்மதி கரிகாலன் ஆகியோர் நாடாவைவெட்டி அரசியல் அலுவலகத்தை திறந்து வைத்தனர்.

விடுதலைப் புலிகளின் தேசியக் கொடியை சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார். அரசியல் அலுவலக பெயர்ப் பலகையை அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பாவா, இராணுவத தளபதி ஸ்ரான்லி ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

இவ்வைபவம் கல்முனை அலுவலகப் பொறுப்பாளர் அன்னசீலன் தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவதில் மகளிர் அணித் தலைவி காயா, ஜெனார்த்தனன், பொருண்மிய பொறுப்பாளர் ஹென்றி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ)

## தென்மராட்சி ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

தென்மராட்சி,ஜூன்12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன.

கொடிகாமம் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் -

சாவகச்சேரி கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாளைமறுதினம் பிற்பகல் 1 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் -

கலந்துரையாடல்கள் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## சக்கோட்டையில் மீண்டும் படைமுகாம்

தென்மராட்சி,ஜூன்12

முகாமை மூடிவிட்டு வெளியேறிய படையினர் ஒரு மாதத்தின் பின்னர் அதே இடத்தில் முகாமிட்டுள்ளனர்.

வடமராட்சி சக்கோட்டை கடற்கரையை அண்டிய பகுதியிலேயே மீண்டும் படையினர் முகாமிட்டுள்ளனர்.

(ஐ-117)

## விரிவுரைகள் நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டப் பின் படிப்புக்கள் பீடத்தின் விரிவுரைகள், நாளை வழமைபோல நடைபெறும் என்று பட்டப் பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அசண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

பண்பாட்டியல் முதுகலைமாணி, கல்விமுதுமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பொது நிர்வாக டிப்ளோமா கற்கை போன்றவற்றுக்கான விரிவுரைகளே நடைபெறவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-13)


கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனத்தின் சென்ற ஆண்டு உபதலைவர்

சிவஞானம் நித்தியானந்தம்

அவர்களின் அகால மரணத்தினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்.

(C/22490)

தேவை

றொட்டி - இறைச்சி - உணவு தயாரிப்பு வேலைகள் தெரிந்தவர் உடன் தேவை.

சும்மா றீறாம்

உயரப்புலம், ஆனைக்கோட்டை.

(4784)

கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு.தே.தவநாயகம் அவர்களின் அன்பு தந்தையார்

குருசுமுத்து தேவசகாயம்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலக நலன்புரிச் சங்கம், வேலணை.

(4791)

# யாழ். நகரப் பகுதி மீனவர்களுடன் படை அதிகாரிகள் நேற்றுப் பேச்சு!

குருநகர்,ஜுன்12

யாழ். குடாக்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். படை அதிகாரிகளுக்கும் யாழ். நகர மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையேயான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 11 மணியளவில் 512ஆவது பிரிகேட் தலைமையகம் இயங்கும் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

512ஆவது படைத் தளபதியின் அழைப்பின் பேரில் குருநகர், நாவாந்துறை, பாஷையூர், கொழும்புத்துறை பிரதேச மீன்பிடிச் சங்கங்களைச் சேர்ந்த சுமார் 15 உறுப்பினர்கள் இதில கலந்துகொண்டனர்.

யாழ். படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

★ யாழ். குடாக்கடலில் இரவு - பகல் தொடர்ந்து மீன்பிடிக்க அனுமதி -

★ பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகிய இடங்களில் உள்ள மீனவர் குடியிருப்புக்களில் இருந்து படையினர் விலகி அவ்வீடுகளை உரியவர்களிடம் மீளவும் ஒப்படைத்தல் -

★ யாழ். - கொழும்புத்துறை பஸ் போக்குவரத்துச் சேவையை மீளவும் ஆரம்பிக்க வசதியாக இவ்வீதியில் அமைநதுள்ள இராணுவ முகாம்களையும் அகற்றுதல் -

★ குருநகர் மீன்வாடியை முன்பிருந்தவாறு குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலை அமைந்துள்ள இடத்துக்கு அருகில் உள்ள கடற்பகுதியில் மீளவும் ஆரம்பித்தல் -

★ குடாக்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை வெளி இணைப்பு இயந்திரங்கள் மூலம் மீன் பிடிக்க அனும்தித்தல் -

★ யாழ். குடாக்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களிடம் இராணுவத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாஸ் இன்றி மீன்பிடிக்க அனும்தித்தல் -

ஆகிய கோரிக்கைகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட மீனவர் சங்கப் பிரதிநதிகளால் முன்வைக்கப்பட்டன.

இவற்றில் பாஸ் நடைமுறையை மட்டும் நீக்க படை அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்ததாகவும் - இது தொடா பாக காலப்போக்கில் பரிசீலனை செய்வதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

ஏனைய கோரிக்கைகள் தொடர்பாக, வடமராட்சி மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர் தொடர்ந்து யாழ். நகர மீனவா சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதாகவும் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்து விவகார அமைச்சர் தி. மகேஸ்வரனால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பிற்கு வடமராட்சி உட்பட ஏனைய பிரதேச மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அழைக்கப்படாதது குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

(ஐ-51-86-173)

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேலும் பயனுள்ளதாக்குவதற்கு அந்த உடன்படிக்கைக்கு மேலும் உந்து சக்தியும் வலுவும் ஊட்ட வேண்டும் என்று இலங்கைப் பிரதமர் விரும்புகிறார்.

அதற்கு ஒரு செயற்படை அணியை ஏற்படுத்துவது என்று இணக்கம் காணப்பட்டது. இந்தப் படையில் இரு நாடுகளின் அதிகாரிகளும் நிபுணர்களும் இருப்பார்கள்.

இலங்கைக்கான கடன் திட்டத்தை இலங்கையின் கோரிக்கைப்படி இந்தியா விஸ்தரிக்கும். திருபபிச் செலுத்தும் கால எல்லை 16வருடங்களாக இருக்கும். ஐந்து வருட மேலதிக கால அவகாசமும் வழங்கப்படும்.

கோதுமை விநியோகத்திற்கான இருதரப்பு உடன்படிக்கை அமுல் குறித்து இரு பிரதமர்களும் திருப்தி தெரிவித்தனர்.

இலங்கையின் விவசாய அபிவிருத்திக்கு இந்தியா தொழில்நுட்ப உதவிகளை வழங்கும். தன்னுடைய அனுபவத்தையும் இலங்கையுடன் பகிர்ந்துகொள்ளும்.

திருகோணமலை எண்ணெய்க் குதத்தை நிர்வகிப்பதற்கும் இலங்கையில் எண்ணெய் சில்லறை விற்பனையில் இந்திய எண்ணெய்க் கம்பனி தன்னுடைய புதிய கம்பனி ஒன்றின் மூலம் ஈடுபடுவதற்கும் இந்திய எண்ணெய்க் கம்பனியும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளவேண்டும் என்றும் இரு பிரதமர்களும் இணங்கியுள்ளார்கள்.

தனியார்துறை நிபுணர்களையும் முதலீட்டாளர்களையும் பயன்படுத்தி இரு நாடுகளுக்குமிடையிலான தரைப் பாலம் அமைப்பது பற்றிய சாத்தியக் கூறுகளை இந்திய திட்டமிடல் கமிஷன், இலங்கைக்கொள்கை அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் வழி நடத்தலில் ஆராய்வது என்றும் இரு தரப்புக்களும் இணங்கியுள்ளன.

சர்தேச பயங்கரவாதம் உலக சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தானது. அரசியல், இன, மத, சமூக, பொருளாதார மற்றும் எந்த அடிப்படையிலும் பயங்கரவாத நடவடிக்கைகளை நீதிப்படுத்தமுடியாது. பயங்கரவாதம் முற்றுமுழுதான ஒரு கேடு. அது முழு உலகுக்கும் ஒரு சாட்டை. அதை எல்லோரும் ஒன்று சேர்ந்து முறியடிக்கவேண்டும் என்று இரு பிரதமர்களும் இணங்கியுள்ளார்கள்.

இரு நாடுகளுக்குமிடையில் பரஸ் பரம் நம்பிக்கை, புரிந்துணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் நட்புறவை வளர்க்கும் வகையில் பேச்சுக்கள் அமைந்திருந்தன.

- இப்படிக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)


**மூன்றாவது மனிதன்**
**புத்தகக் காட்சியும் விற்பனையும்**

கலை,
இலக்கியம்,
விமர்சனம்,
மொழியாக்கம்,
சமூகவியல்,
அறிவியல்,
கணனியியல்,
மருத்துவம்,
மற்றும் துறைசார் நூல்களும்
சிறு சஞ்சிகைகளும்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஆதரவில்**

2002.யூன் 13, 14, 15, 16 களில்
10 மணி முதல் 5 மணிவரை
யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில்

நிருத்திகா ஜீவலர்ஸ்
கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்


## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க்கட்சிகள் கூட்டமைப்பு உட்பட பல அரசியல் கட்சிகளும் மாணவர் அமைப்புகளும், பொது நிறுவனங்களும் ஆதரவு தெரிவித்திருக்கின்றன.

ஹர்த்தாலை ஒட்டி இன்று மருந்தகங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள் உட்பட சகல வர்த்தக நிலையங்களையும் மூடிவைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

பஸ் போக்குவரத்துச் சேவைகள் தனியார், வாடகை வாகனச் சேவைகளும் இன்று இடம்பெறமாட்டாது. தனியார் விமான சேவையும் நிறுத்தப்பட்டிருக்கும் எனத் தெரிகிறது.

கூட்டுறவுக் கடைகள், மதுபான நிலையங்கள் என்பனவும் இன்று மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய மருத்துவ சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து சேவைகளும் இன்று செயற்படமாட்டா என்று தெரிவிக்கப்பட்டது:

(ஐ-6-8-10-12-31-86-173)

## அதே இடத்தில் மற்றொரு விபத்து!

புத்தளத்தில் கடந்த ஞாயிறன்று யாழ்.பயணிகள் பஸ்ஸும் ரயிலும் கோர விபத்துக்குள்ளானது தெரிந்ததே. இவ்விபத்தையடுத்து அதே இடத்தில் 24 மணித்தியாலங்கள் கழிவதற்குள் மீண்டும் ஒரு விபத்து நிகழ்ந்துள்ளது. இவ்விபத்தில் இளைஞர் ஒருவர் உடல் நசுங்கிப் பலியாகி உள்ளார்.

கடந்த 9ஆம் திகதி யாழ். பயணிகள் பஸ், ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதனையடுத்து அடுத்த நாளான பத்தாம் திகதி எஸ். சத்தியசீலன் (வயது 26) என்பவர் ரயிலுடன் மோதி உடல் நசுங்கிப பலியாகியுள்ளார். நண்பர்களுடன் புத்தளம் பாலாவி ரயில்வே நிலையம் அருகில் 'கிளிதட்டு' விளையாடிக கொணடிருந்த வேளை தவறுதலாக ரயில் பாதையில் வீழ்ந்ததால் வேகமாக ஓடிவந்த ரயிலுடன் மோதுண்டார்.

## ஹாட்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாடசாலைச் சூழலை விட்டு படையினரை வெளியேறக் கோரும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் பருத்தித்துறை நகரப் பகுதியில் பரவலாகக் காணப்பட்டன.

தற்போதைய வகுப்பு பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு பலன் கிடைக்காவிடில் நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள படை முகாம்களின் முன்பாக மறியல் போராட்டம் நடத்த மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை -

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் படையினர் 160 நாள்களுள் பாடசாலைகள் போன்ற இடங்களிலிருந்து வெளியேறுவர் என்ற உறுதி மொழி படைத்தரப்பால் தனக்குத் தரப்பட்டிருப்பதால் பாடசாலைச் செயற்பாடுகளை வழமையாக மேற்கொள்ளும்படி யாழ்.மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் இரு கல்லூரி அதிபர்களுககும் பணித்துள்ளார்.

நாளை பாடசாலை மாணவத் தலைவர்களுடன் கலந்துரையாடி பாடசாலைச் செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஹாட்லிக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

(ஐ-3-ரி-173-86-15-117)



இந்திய விஜயத்தின் போது முன்னாள் பிரதமர் நரசிம்மராவை ரணில் விக்கிரமசிங்க சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.



முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பிரதமர் ரணிலை வரவேற்றபோது...

## கடற்படைக்கு சீனா உதவி!

கடற்படையைப் பலப்படுத்துவதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சீனா சென்றுள்ளார்.

அவருடன் கடற்படைத் தளபதி அட்மிரல் தயா சாந்தகிரி, சீனாவுக்கான இலங்கைத் தூதர் பேர்னாட் குணதிலக ஆகியோரும் பீஜிங சென்றுள்ளனர்.

கடந்த ஐந்து தினங்களுக்கு முன்னர் இவர்கள் சீனாவுக்குப் பயணமாகிய போதிலும் இந்த விஜயம் குறித்து உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடற்படையைப் பலப்படுத்துவதற்கான உதவிகளை பாதுகாப்பு அமைச்சர் சீன அதிகாரிகளிடம் கோருவார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கும் பிரதான நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். (ஐ)

## மீனவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன.

நேற்று மூன்றாவது நாளாகவும் மீனவர்கள் திரண்டு மறியற் போரில் ஈடுபட்டனர். நேற்றுக் காலை பெரும் எண்ணிக்கையான பொலீஸார் யாழ். செயலகப் பகுதியில் காணப்பட்டனர். அவர்கள் திடீரென செயலகத்தின் வாயில் பகுதியில் இருந்த மீனவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

மேலிடத்திலிருந்து விடுக்கப்பட்ட உத்தரவுக்கு அமைய தாங்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபடுவதாக பொலீஸார் மீனவர்களிடம் தெரிவித்தனர்.

பிரதான வாயில் உட்பட செயலகத்தினுள் பிரவேசிக்கும் சகல வழிகளையும் பொலீஸார் திறந்து விட்டனர். குண்டாந்தடி தாங்கிய பொலீஸா அவ்விடங்களில் காவல் கடமையில் நிறுத்தப்பட்டனர். ஆரம்பத்தில் மீனவர்களிடையே சிறிது கலவரமான உணர்வு காணப்பட்டது. எனினும் பொலீஸாரின் நடவடிக்கையை அவர்கள் எதிர்க்கவில்லை.

பிரதான வாயிலை விட்டு மீனவர்கள் அமைதியாக ஒதுங்கிக்கொண்டனர்.

**ஊழியர்கள் வரவில்லை**

செயலக வாயில்கள் பொலீஸாரால் திறக்கப்பட்டதை அடுத்து ஊழியர்கள் பணிக்குத் திரும்புவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அரச அதிபரோ அன்றி வேறு ஊழியர்கள் எவருமோ செயலகத்துக்குள் செல்லவில்லை.

இதனால் செயலகத்தின் செயற்பாடுகள் நேற்று மூன்றாவது நாளாகவும் தடைப்பட்டிருந்தன.

மீனவர்களின் போராட்டம் இன்றும் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.பிரதேச செயலகம் முன்பாகவும் போராட்டம் இன்றும் நடைபெறும்.

(ஐ-10-15-51-86-173)


**கடை வாடகைக்குத் தேவை**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பேருந்து நிலையத்திற்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இடையில் கடை வாடகைக்குத் தேவை.

தொடர்பு:
விளம்பர இல.1538,
மே/பா. உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.

(4750)


## மரண அறிவித்தல்

### செல்வி பொன்னம்பலம் செல்லம்மா

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது யாழ்பாடி வீதி, இல.14 ஐ வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்வி பொன்னம்பலம் செல்லம்மா நேற்று (11.06.2002) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, இலட்சுமி, விக்கினராஜா மற்றும் கனகம்மா, கண்மணி, புவனேஸ்வரி, சிவகங்கை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பழனித்துரை, குமாரசுவாமி, சிவசம்பு மற்றும் சதாசிவலிங்கம், யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2002) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கண்மணி
(சகோதரி)

*இல.14,யாழ்பாடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(4792)


உ
சிவமயம்

**திறப்பு விழா**

அன்புடையீர்!

இன்று (12.06.2002) புதன்கிழமை எமது சுற்றுலாவிடுதி மங்களகரமாக ஆரம்பித்து திறந்து வைக்கப்படுகின்றது.

*தென்பகுதியில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு யாழ்நகரில் அமைதியான சூழலில் தங்குவதற்கு வசதியான பல அறைகள் வாடகைக்கு உண்டு.*

**12.06.2002 இல் இருந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.**

*தொடர்புகளுக்கு:*
த.கு.சுற்றுலா விடுதி,
200, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கங்கள்:- 2555, 2985

(4777)



**A/L 2003**
**பொருளியல்**
**PAPER CLASS**
ஆரம்பம்: 14.06.2002 4.30p.m.
By: P மோகன்
B.B.A.(Hons)
**ஸ்ரார் கல்வி நிலையம்**
சுன்னாகம். (4775)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.